வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk மலர் : 03 07.12.2022 புதன்கிழமை இதழ் : 364 பக்கங்கள் : 16

# தமிழ் மக்களை விரட்டுவதற்கே வடக்கு, கிழக்கில் இராணுவம்!

## விக்னேஸ்வரன் எம். பி. குற்றச்சாட்டு

- *அரசாங்கத்தை வீழ்த்தவும் உடன்பட மாட்டேன்*



யாழ்ப்பாணம், டிசெம்பர் 07

தெற்கிலிருந்து தமிழ் மக்களை விரட்டி - வெளிநாடுகளுக்கு அனுப்பியமை போன்று, இன்று வடக்கு - கிழக்கில் வாழும் தமிழர்களை வெளிநாடுகளுக்கு விரட்டவும் - இடம்பெயர செய்யவும் பல நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்கிறது. இதற்கு பாதுகாப்பாக - அனுசரணையாளர்களாக இருப்பது இராணுவத்தினரே.

- இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான க. வி. விக்னேஸ்வரன்.

15



# மதுபானம் 55 பேரையும் புகையிலை 60 பேரையும் தினமும் பலி எடுக்கிறது

*கொழும்பு, டிசெ. 07*

*நாட்டில் மதுபானத்தால் 55 பேரும், புகையிலை பாவனையால் 60 பேரும் நாளாந்தம் உயிரிழக்கின்றனர் என்று புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகாரசபையின் தலைவர் பேராசிரியர் சமாதி ராஜபக்ஷ எச்சரித்துள்ளார்.*

15

# அதிகாரத்தை பகிருமாறு இனவாதிகள் கோரும் நிலைமையை ஏற்படுத்துங்கள்!

## *அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா*

*கொழும்பு, டிசெ. 07*

*அதிகாரப் பகிர்வை மேற்கொள்ளுமாறு இனவாதிகளும் சொல்வதற்கான சூழலை ஏற்படுத்த வேண்டுமே தவிர, இனவாத சக்திகளுக்கு மெல்வதற்கு அவலை கொடுக்கக்கூடாது என்று கூறியிருக்கிறார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.*

*பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற*

15



# ஐந்து முதன்மை நாடுகளின் தூதர்களுடன் ரணில் சந்திப்பு

*கொழும்பு, டிசெ. 06*

*சர்வதேசத்தில் அதிகாரம் செலுத்தும் ஐந்து முக்கிய நாடுகளின் தூதுவர்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று சந்தித்து கலந்துரையாடினார்.*

*இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளின் இலங்கைக்கான தூதுவர்களையே அவர் நேற்று சந்தித்து கலந்துரையாடினார்.*

*இதன்போது, இரு தரப்பு அபிவிருத்தி ஒத்துழைப்பு தொடர்பில் பேசப்பட்டன என்று ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.* *(ஐ)*

# அதிகாரிகளின் விருப்பத்துக்கே உள்ளூராட்சி எல்லை நிர்ணயம்!

## வினோநோகராதலிங்கம் எம். பி. சாடல்

*கொழும்பு, டிசெ. 07*

*மக்கள் பிரதிநிதிகளினதும் மக்களினதும் விருப்பத்துக்கு முரணாக உள்ளூராட்சி மன்றங்களின் எல்லை தொகுதிகள் நிர்ணயம் செய்யப்படுவதை உடனடியாக நிறுத்த வேண்டும். அரச அதிகாரிகளின் விருப்பத்துக்கு அமையவே எல்லை நிர்ணயம் செய்யப்படுகிறது என்று தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் தெரிவித்தார்.*

*பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய அவர்,*

15

# பல்கலை. மாணவர்க்கு பிணை ஆனாலும் மறியல் தொடர்கிறது!

*கொழும்பு, டிசெ. 07*

*அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே, அனைத்து பல்கலைகழக பிக்குமார் மாணவர் ஒன்றிய ஏற்பாட்டாளர் கல்வேவ சிறீ தம்ம தேரருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது. எனினும், இருவரும் வேறொரு வழக்கு தொடர்பில் விளக்கமறியலில்*

15

## *இனப் பிரச்னை தீர்வு பேச்சு:*

# உத்தியோகபூர்வ அழைப்பு இதுவரை கிடைக்கவில்லை

## *சம்பந்தன், சித்தார்த்தன், மனோ தெரிவிப்பு*

*கொழும்பு, டிசெ. 07*

*இனப் பிரச்னைக்கான தீர்வு தொடர்பான பேச்சுக்கு அழைப்பு விடுக்கப்பட்டபோதும் அது தொடர்பான உத்தியோகபூர்வ கடிதம் எதுவும் தமக்கு நேற்று வரை கிடைக்கவில்லை என்று தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள்*

15





குமாராலய தீபத் திருநாளான நேற்று வரலாற்று பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் நேற்று சொக்கப்பனை எரிக்கப்பட்டது. இதன்போது நல்லூர் கந்தன் வள்ளி, தெய்வானை சமேதராக கைலாச வாகனத்தில் எழுந்தருளினார்.

படம் – ஐ. சிவசாந்தன்

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

நாடு பொருளாதார நெருக்கடியில் அல்லோலகல் லோலப்பட்டுக் கொண்டிருந்தபோது, முப்பத்து நான்கு இராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்பட்டனர். அத்தனை அமைச்சர்கள் தேவைதானா என்று எதிர்க்கட்சியினர் கேள்வி எழுப்பியபோது, அவர்களுக்கு இராஜாங்க அமைச்சர்களுக்குரிய சிறப்பு சலுகைகள் வழங்கப்படாது என்றும் அதிகம் ஏன் வாகனங்கள்கூட வழங்கப்படாது எனவும் விளக்கமளிக்கப்பட்டது.

அதாவது இராஜாங்க அமைச்சர்கள் தத்தமது பாராளு மன்ற உறுப்பினர்களுக்கான சம்பளத்துடனேயே பணி யாற்றுவார்கள் என்றும் சிலர் விளக்கமளித்தனர்.

ஆனால், இரண்டு இராஜாங்க அமைச்சர்களுக்கு இடையே அரச உத்தியோகபூர்வ வீடுகளுக்காக நடந்த குடுமிப்பிடிச் சண்டை ஒன்று பற்றிய செய்தி ஒன்றுதான் தெற்கில் பரபரப்பாகப் பேசப்படுகின்றது.

அமைச்சர்கள், முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் முக்கிய பிரமுகர்களுக்கு அரச வீடுகளை ஒதுக்கீடு செய்து கொடுப்பது உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் பணி. அந்த அமைச்சுக்கான இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்தவுக்கு வீடு ஒன்றை வழங்குவதற்கு அமைச்சின் செயலாளர் நடவடிக்கை எடுத்திருந்தார்.

பிரதி சபாநாயகரான அஜித் ராஜபக்ஷ முன்னர் அமைச்சராக பணியாற்றியபோது வசித்துவந்த அரச இல்லம், அவர் பிரதி சபாநாயகராக நியமிக்கப்பட்டமையைத் தொடர்ந்து, பிரதி சபாநாயகருக்கான இல்லத்துக்கு சென்றிருந்ததால் காலியாகி இருந்தது. அந்த வீட்டையே உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்தவுக்கு வழங்குவதற்கு அமைச்சின் செயலா ளர் ஏற்பாடு செய்திருந்தார்.

இந்த ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்த ஒருநாள், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்பு இராஜாங்க அமைச்சர் ஜகத் புஸ்பகுமார வந்திருந் தார். அமைச்சின் செயலாளரை சந்தித்த அவர், தனக்கு உத்தியோகபூர்வ இல்லம் ஒன்றை ஒதுக்கித்தரு மாறு கோரிக்கை விடுத்திருக்கிறார். ஓர் இராஜாங்க அமைச்ச ருக்கு வீடு வழங்கினால் முப்பத்து நான்கு பேரும் வந்து நிற்பார்கள் என்பது செயலாளருக்கு தெரியாததல்ல. தனது அமைச்சின் இராஜாங்க அமைச்சருக்கு - துறைசார்ந்த அமைச்சர் என்பதால் வீடு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தாலும் மற்றைய இராஜாங்க அமைச்சர்களுக்கு இதுபோன்ற சலுகைகள் வழங்குவதில்லை என்று ஏற்கனவே முடிவெடுக்கப்பட்டிருந்ததாம்.

அமைச்சின் செயலாளரிடம் தனது கோரிக்கையை வலிறுத்தி அவர் கேட்டுக்கொண்டிருந்தபோது செய லாளரின் அறைக்கு வந்த அவரின் அதிகாரி ஒருவர், உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சருக்கு ஒதுக் கப்பட்ட வீட்டின் திறப்பை செயலாளரின் மேசையில் வைத்து விட்டு, 'சேர் இதுதான் நமது இராஜாங்க அமைச்சருக்கு ஒதுக்கப்பட்ட வீட்டின் திறப்பு. அவரிடம் கொடுங்கள்', என்று கூறிவிட்டு திறப்பை மேசையில் வைத்துவிட்டு சென்றுவிட்டார்.

'ஆமாம், எனக்கு இது வேண்டும். நான் இதனை எடுத் துக்கொள்கிறேன்.' என்று மட்டும் கூறிவிட்டு திறப்பை எடுத்துக்கொண்டு ஜகத் புஸ்பகுமார சென்றுவிட்டா ராம். செயலாளர் ஆட்சேபனை தெரிவித்தபோதிலும் அவர் அதனைக் கருத்தில் கொள்ளவில்லை என்று தெரிவிக் கப்பட்டுள்ளதுடன், குருந்துவத்தை பொலிஸ் நிலை யத்திலும் முறைப்பாடு செய்தாராம்.

ஆனால், அமைச்சர் ஜகத் புஸ்பகுமார இரண்டு மூன்று மணித்தியாலங்களில் அவசர அவசரமாக புதிய வீட்டுக்கு சென்றுவிட்டார். சிக்கலில் இருந்த பொதுநிர்வாக அமைச்சு, தனது துறைக்கு பொறுப்பான இராஜாங்க அமைச்சருக்கான அதிகாரபூர்வ இல்லம் ஒன்றை மிகவும் சிரமப்பட்டு தேடிக்கொடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப் பட்டதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை இந்த முக்கிய 'விளையாட்டு' திட்ட மிட்ட நிகழ்வாக இருக்குமோ என்ற சந்தேகம் எழுந் துள்ளதாக அமைச்சு மட்டத்தில் சந்தேகிக்கப்படுகின்றது.

இந்த விடயங்களை எனக்கு வர்ணித்த தெற்கின் மூத்த ஊடகர் ஒருவர் சொன்னார், எத்தனை 'அறகலய' வந்தா லும் இவர்களைத் திருத்த முடியாது என்று.!

- ஊர்க்குருவி

# புதிய அமைச்சர்கள் சிலர் இந்த வாரம் பதவியேற்பு!

## குமார வெல்கம, துமிந்த, ராஜித ஆகியோருக்கும் அமைச்சு பதவி

கொழும்பு, டிசெ. 07

அமைச்சரவை அந்தஸ் துள்ள சில அமைச்சர்கள் இந்த வாரம் பதவிப்பிரமாணம் செய்த தயாராகி வருவதாக அர சாங்கத்தின் தகவல்கள் தெரி விக்கின்றன.

இதனடிப்படையில், முன் னாள் அமைச்சர்களான குமார வெல்கம,ராஜித சேனாரத்ன மற்றும் துமிந்த திஸாநாயக்க ஆகியோர் புதிய அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாக பதவிப்பிரமாணம் செய்துக் கொள்ள உள்ளனர்.

குமார வெல்கமஏற்கனவே போக்குவரத்து அமைச்சராக பதவி வகித்துள்ளதுடன் அவ ருக்கு மீண்டும் அந்த பதவி வழங்கப்பட உள்ளதுடன் ராஜித சேனாரத்ன சுகாதார அமைச்சராக பதவியேற்க தயா ராகி வருவதாக கூறப்படுகிறது.

துமிந்த திஸாநாயக்க மின்சக்தி அமைச்சராக பதவிப்பிரமாணம் செய்து கொள்ளலாம் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

புதிய அமைச்சர்கள் பதவிப் பிரமாணம் செய்துக்கொண்ட பின்னர், தற்போதைய அமைச் சரவையில் அங்கம் வகிக்கும் சில அமைச்சர்களின் துறைகள் மாற்றங்களுக்கு உள்ளாகும்.

இதனடிப்படையில், போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன, சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக் வெல, மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர ஆகிய அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களிடம் இருக்கும் இந்த துறைகள் புதிய அமைச் சர்களுக்கு பகிரப்படும் என பேசப்படுகிறது.

(அ)

# இலங்கையில் கணிசமான மக்கள் நெருக்கடியை எதிர்கொள்கின்றனர்

## ஐ. நா. அமைப்பு சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 07

உணவுப் பாதுகாப்பின்மை, அத்தியாவசியமான மருந்துக ளுக்கு பற்றாக்குறை,அதிகரித்து வரும் பாதுகாப்பு போன்ற பல காரணிகளால் இலங்கை நெருக்கடியை எதிர்கொள்கின் றது என தெரிவிக்கப்பட்டுள் ளது.

மனிதாபிமான விவகாரங் களை ஒருங்கிணைப்பதற்கான ஐ.நாவின் அலுவலகத்தின் ஆசிய பசுபிக்கிற்கான பிராந் திய அலுவலகம் வெளியிட்ட தகவலிலே இவ்வாறு தெரிவிக் கப்பட்டுள்ளது.

இதற்கமைய ஒக்ரோபரில் உணவு பணவீக்கம் 85.6 வீத மாக காணப்படுவதால் சனத்தொகையில் குறிப்பிடத் தக்க எண்ணிக்கையானவர்கள் தங்கள் தேவைகளை பூர்த்தி செய்வதில் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர் .

மேலும் உணவுப் பாது காப்பு தொடர்ந்தும் பிரச் னைக்குரியதாக காணப்படுவ தால் பத்தில் மூன்று குடும் பங்கள் போதுமான உணவை உண்ணவில்லை எனவும் ஐ.நா. அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

(அ)

# மக்கள் கஷ்டப்படும்போது நான் கேக் சாப்பிடமுடியாது

## பஸில் ராஜபக்ஷ கூறுகின்றார்



கொழும்பு, டிசெ. 07

மக்கள் கஷ்டப்படும் நேரத் தில் என்னால் கேக் சாப்பிட முடியாது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெர முனவின் ஊடக மையத்தின் நான்காம் ஆண்டு நிறைவு விழாவில் பிரதம அதிதியாக கலந்துகொண்டபோதே அவர் இந்த கருத்துக்களை வெளி யிட்டார்.

பத்தரமுல்லை நெலும் மாவத்தையில் அமைந்துள்ள பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன் தினம் காலை நடைபெற்ற வைப வத்தில் முன்னாள் அமைச்சர் பஸில் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் எவரும் சுதந்திரமாக அரசியல் செய்யக்கூடிய சூழல் உருவாகியுள்ளதாகவும் பஸில் குறிப்பிட்டார்.

மக்களின் எதிர்பார்ப்புகளை 100 வீதம் நிறைவேற்ற முடியா மல்போனமை தொடர்பில் வருந்துவதாகவும், குறைபாடு களை நிவர்த்தி செய்து மக்க ளின் எதிர்பார்ப்புகளை நிறை வேற்ற பாடுபடுவேன் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# சர்வதேச தர பல்கலைகளை இலங்கையில் நிறுவ ஏற்பாடு

கொழும்பு, டிசெ. 07

சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களை இலங்கையில் ஸ்தாபிப்பது தொடர்பில் பாராளுமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிப்பதற்கு குழுவொன்றை நியமிக்குமாறு கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவிடம் ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இன்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில், சர்வதேச பல்கலைக்கழகங்களின் கிளைகளை நாட்டில் நிறுவுவது தொடர்பான கேள்விக்கு பதிலளிக் கும்போதே அமைச்சரவைப் பேச்சாளர் மேற்கண்டவாறு கூறினார்.

இதற்காக முன்னாள் கல்வி அமைச்சர்கள் மற்றும் உயர்கல்வி அமைச்சர்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

சர்வதேச அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகங்களை இலங்கை யில் நிறுவ அனுமதித்தால், இலங்கையில் இருந்து பெறப்படும் அந்நியச் செலாவணி பெருமளவு சேமிக்கப்படும். இலங்கை மாண வர்கள் மட்டுமல்லாது மாலைதீவு, பங்களாதேஷ், நேபாளம், இந்தோனேசியா போன்ற நாடுகளைச் சேர்ந்த மாணவர்களும் கல்விக்காக இலங்கைக்கு வந்தால் டொலர்களை பெற்றுக்கொள் ளக்கூடிய வழியாகவும் இது அமையும் எனவும் அவர் குறிப்பிட் டார். (அ)

# சீனாவின் 1,000 மெ.தொன் அரிசி நாட்டுக்கு வந்து சேர்ந்தது

கொழும்பு, டிசெ. 07

சீனாவினால் வழங்கப்பட்ட மற்றுமொரு அரிசி ஏற்றுமதி இலங்கைக்கு வந்துள்ளது.

1,000 மெட்ரிக் தொன் அரி சியை ஏற்றிய "சின் ஹொங் கொங்" கொள்கலன் நேற்று முன் தினம் காலை கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்த தாக இலங்கைக்கான சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

100,000 அரிசிப் பொதிகள் இலங்கை மாணவர்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளது.

2022 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் சீனா 9,000 மெற் றிக் தான் அரிசியை இலங் கைக்கு வழங்கியுள்ளதாக தூத ரகம் குறிப்பிட்டுள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu
07.12.2022 புதன்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 21

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அதிகார தரப்புகளிடம் இதயசுத்தியை எதிர்பார்க்க முடியாது?

தேசிய இனப்பிரச்னையை தீர்ப்பதற்கு சிங்களத் தலைமைகள் இதயசுத்தியுடன் எங்களுடன் இணைந்து செயல்பட முன்வர வேண்டுமென்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் ஊடக அறிக்கையொன்றின் மூலம் கோரியிருக்கின்றார். தேசிய இனப் பிரச்னைக்கான தீர்வை அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதத்துக்குள் காணவுள்ளதாகவும் அனைத்து கட்சிகளின் தலைவர்களையும் அழைக்கவுள்ளதாகவும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கின்ற நிலையிலேயே தமிழ் கட்சிகளும் அரசியல் தீர்வு தொடர்பில் பரபரப்படைந்திருக்கின்றன. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் சுரேஷ் பிறேமச்சந்திரனும் அவரின் பங்குக்கு அறிக்கையொன்றை வெளியிட்டிருகின்றார்.

இலங்கை தீவை மாறி, மாறி ஆட்சிசெய்த சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகள் எவற்றிலும் இதயசுத்தியுடன் நடந்துகொண்டதில்லை. பண்டா - செல்வா உடன்பாட்டிலிருந்து ரணில் - மைத்திரி ஆட்சிக்காலத்து புதிய அரசியல் யாப்பு வரையில் சிங்கள இதயசுத்திக் கதை மிகவும் நீண்டது. இந்த வரலாற்று பின்புலத்தில் நோக்கினால் சிங்கள ஆட்சியாளர்களிடமிருந்து தமிழர்கள் இதயசுத்தியை எதிர்பார்க்கவே முடியாது.

அதற்காக அவர்களுடன் பேசாமலும் இருக்க முடியாது. சிங்கள ஆளும் வர்க்கம் மட்டுமல்ல எந்தவோர் ஆளும் தரப்பும் தங்களின் அதிகாரத்தைப் பேணிப் பாதுகாப்பதில் வெறித்தனமான ஈடுபாட்டையே கொண்டிருக்கும். இலங்கை சுதந்திரமடைந்ததாகக் கூறப்படும் காலத்திலிருந்து இதுவரையில் முன்னெடுக்கப்பட்ட அனைத்துப் பேச்சுகளும் தோல்வியிலேயே முடிந்திருக்கின்றன. இந்தப் பின்புலத்தில் நோக்கினால் இனியும் பேச்சுகள் வெற்றிபெறும் என்பதற்கு எந்தவோர் உத்தரவாதமும் இல்லை. இந்த நிலையில் தமிழர்கள் ஒரு தரப்பாக சிங்கள ஆளும் வர்க்கத்தை எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றனர் என்பதுதான் கேள்வியாகும்.

எனவே, தமிழ்த் தேசிய கட்சிகளின் தலைவர்கள் என்போர் சிங்கள ஆட்சியாளர்களின் இதயசுத்தி தொடர்பில் கவலைப்படுவதை விடுத்து தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் ஓரணியாக விடயங்களைக் கையாளும் இதயசுத்தியோடு இருக்கின்றனவா - என்பது பற்றியே சிந்திக்க வேண்டும். ஓரணியாக கொழும்பை அணுகுவது எந்தளவுக்கு முக்கியமோ - அந்தளவுக்கு முக்கியமானது சூழ்நிலையை புரிந்துகொண்டு - இதுவரையான தோல்வி அனுபவங்களிலிருந்து கற்றுக்கொண்டு விடயங்களை யதார்த்தபூர்வமாக அணுகுவதற்கான உபாயங்கள் தொடர்பில் சிந்திப்பதும் முக்கியமானது. ஏனெனில், ஒவ்வொரு பேச்சுக்கு பின்னரும் வெறும் கையோடு திரும்பும் நிலைமை இனியும் நடைபெறக்கூடாது.

அது மீண்டும் நடைபெறுவதைத் தடுக்க வேண்டுமாயின், தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் அனைத்தும் இதயசுத்தியுடன் விடயங்களைக் கையாள வேண்டும் என்பதில் கருத்தொருமித்த யாதார்த்தபூர்வமான அணுகுமுறைக்கு திரும்ப வேண்டும். போக முடியாத ஊருக்கு வழிசொல்லும் விவாதங்களை தவிர்த்து இன்றைய சூழலில் எதனை முன்னிலைப்படுத்தினால் சில விடயங்களை அடைய முடியுமென்னும் நோக்கில் சூழலை அணுக வேண்டும். ஒவ்வொரு கட்சிகளின் தலைவர்களும் இதயசுத்தியுடன் இந்த விடயத்தில் இணைய வேண்டும்.

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை வென்றெடுப்பது என்பது ஒரு தனிப் பாய்ச்சலில் அடையக் கூடிய விடயமல்ல. இதனை செல்வநாயகம் புரிந்து வைத்திருந்தார். ஒருவேளை, இந்திய - இலங்கை ஒப்பந்த காலத்தில் செல்வநாயகம் போன்றதோர் அரசியல்வாதி இருந்திருந்தால், அவர் அன்றைய சூழலை உச்சளவில் பயன்படுத்தியிருப்பார். கடந்த 70 வருடங்களுக்கு மேலான அரசியல் வரலாறு, நமக்கு போதிய அனுபவங்களை தந்திருக்கின்றன. இந்த அனுபவங்களிலிருந்து ஒவ்வொருவரும் இதயசுத்தியுடன் சிந்திக்க முயற்சிக்க வேண்டும். அதற்காக எதனையும் விட்டுக்கொடுக்க வேண்டும் - கைவிடவேண்டும் என்பதில்லை. மாறாக, இலக்கையும் பேணிப் பாதுகாக்க வேண்டும். அதேவேளை அந்த இலக்கை நோக்கி அடுத்த தலைமுறை சிந்திக்க வேண்டுமாயின், மக்களின் இருப்பையும் உறுதிப்படுத்த வேண்டும். அவ்வாறானதோர் அணுகுமுறையே இன்றைய சூழலில் தமிழர்களுக்கு தேவையானது. சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும்.

# மருந்துத் தட்டுப்பாட்டை நீக்கக்கோரி முல்லைத்தீவிலும் நேற்று போராட்டம்

*முல்லைத்தீவு, டிசெ. 07*

முல்லைத்தீவு மாவட்டத்தில் வைத்தியசாலையில் நிலவும் மருந்து தட்டுப்பாட்டை நீக்கக் கோரி மாவட்ட செயலகத்துக்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.




தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியில் மக்கள் உணவுக்காக பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றார்கள்.

இந்த வகையில் மக்களின் வாழ்க்கைச் செலவு மேலும் மேலும் அதிகரித்து செல்வதுடன் நாட்டில் மருத்துவத் துறையிலும் இது பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

பல்வேறுபட்ட முக்கிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதுடன் வைத்தியசாலைகளில் இலவசமாக மருத்துவத்தை பெற்றுக் கொள்ளமுடியாத நிலையில் மக்கள் உள்ளனர்.

இலங்கையில் வறுமைக் குட்பட்ட மாவட்டங்களில் ஒன்றாக முல்லைத்தீவு மாவட்டமும் காணப்படுகின்றது. கிராம புறங்களில் வறுமைக் குட்பட்ட குடும்பங்கள் அதிகளவில் காணப்படும் மாவட்டமாகவும் முல்லைத்தீவு மாவட்டம் காணப்படுகின்றது.

இந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் மாவட்ட வைத்தியசாலையில் மருந்துக்கான தட்டுப்பாடு மற்றும் மருத்துவ உபகரணங்களுக்கான தட்டுப்பாடு என்பனவற்றை நிவர்த்தி செய்யக் கோரி வடக்கு-கிழக்கு பெண்கள் ஒன்றியத்தினரால் நேற்று போராட்டம் நடத்தப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு முன்பாக இடம்பெற்ற கவனயீர்ப்புப் போராட்டத்தின் இறுதியில் ஜனாதிபதிக்கான மனு வாசிக்கப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட செயகத்தில் மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரனிடம் கையளிக்கப்பட்டது. (அ)

# மலேசியாவுக்கு ஆட்களை அனுப்பிய பெண் கைது!

*கொழும்பு, டிசெ. 07*

மலேசியாவுக்கு சுற்றுலா விஸா மூலம் இலங்கையர்களை பணிக்கு அனுப்பும் கடத்தலுக்கு உதவிய பெண் ஒருவர் கைது செய்யப்பட்டு நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

குறித்த பெண்ணை 5 இலட்சம் ரூபா பிணையில் விடுவித்த நீதிமன்றம், பயணத் தடை விதித்துள்ளதுடன், இந்த கடத்தலில் ஈடுபட்ட மற்றுமொரு நபரை கைது செய்ய பணியகத்தின் புலனாய்வுப் பிரிவினர் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

சுற்றுலா விஸா மூலம் மலேசியாவுக்கு வேலை வாய்ப்புக்காக ஆட்களை அனுப்பும் நபர்களை கைது செய்வதற்கான விசேட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், விமான நிலைய பிரிவினரும் விசேட புலனாய்வு பிரிவினரும் இணைந்து குறித்த நபர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகவும் பணியகம் குறிப்பிட்டுள்ளது. (அ)

# உலக உணவு பாதுகாப்பில் இலங்கை மேலும் வீழ்ச்சி!

*கொழும்பு, டிசெ. 07*

உலக உணவுப் பாதுகாப்பில் 65 ஆவது இடத்தில் இருந்த இலங்கை இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் 75 ஆக வீழ்ச்சியடைந்துள்ளதாக எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.


பாராளுமன்றில் நேற்று உரையாற்றியபோதே ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார இதனை தெரிவித்தார்.

வெளிநாடுகளில் இருந்து 7 இலட்சம் மெற்றிக் தொன் அரிசி கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் இன்று விவசாயிகள் அரிசியை விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

விவசாயிகள் அதிகம் உள்ள பொலன்னறுவை இன்று போசாக்கு குறைபாடுள்ள மாவட்டமாக மாறியுள்ளது என்றும் ரஞ்சித் மத்துமபண்டார குறிப்பிட்டார்.

ஒரு கிலோ நெல் உற்பத்தி செய்வதற்கு நூறு ரூபாவுக்கு மேல் செலவாகும் நிலையில் ஒரு கிலோ நெல் 90 ரூபா விற்கும் குறைவாகவே விற்பனை செய்யப்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



டிசெம்பர் - 07 புதன்கிழமை
சுபகிருது வருடம் - கார்த்திகை 21
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : பௌர்ணமி




**மேடம்**
உங்களது செயல்களில் எதிர்பார்த்த நன்மைகள் தள்ளிப் போகும். கவனக்குறைவால் பணிகளில் தடுமாற்றம் ஏற்படும். செயல்களில் நிதானம் அவசியம். வழிபாட்டில் மனம் செல்லும்.

**இடபம்**
குடும்பத்திற்காக திடீர் செலவுகள் ஏற்படும். வரவுகள் ஒரு பக்கம் வந்தாலும் செலவுகள் மறுபக்கம் தயாராக இருக்கும். நிதானமுடன் செயல்படுங்கள். குடும்பத்தினர் எதிர்பார்ப்பு அதிகரிக்கும்.

**மிதுனம்**
எதிர்பார்த்தவற்றில் லாபம் காண்பீர்கள். புதிய முயற்சி ஒன்றில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். நிதிநிலை உயரும். பணியிடத்தில் செல்வாக்கு அதிகரிக்கும். ஆலோசனைக்கு மதிப்புண்டாகும்.

**கடகம்**
தொழிலில் இருந்த மந்த நிலை சரியாகும். புதிய திட்டங்கள் தீட்டி செயல்படுவீர்கள். நண்பர்கள் உதவியுடன் முயற்சி பலிதமாகும். பணியிடத்தில் ஏற்பட்ட நெருக்கடிகள் விலகும். நிதிநிலை உயரும்.

**சிம்மம்**
நினைத்திருந்த ஒரு செயலை நிறைவேற்றுவீர்கள். பொருளாதார நிலை உயரும். உங்கள் முயற்சி சிறு சிறு தடைகளுக்குப்பின் நிறைவேறும். எதிர்பார்த்த பண வரவு உண்டு.

**கன்னி**
கவனத்துடன் செயல்படுங்கள். மற்றவரை நம்பி பொறுப்புகளை ஒப்படைக்க வேண்டாம். எதிர்பார்த்த செயல்களில் பின்னடைவும் மறைமுக எதிர்ப்பும் உண்டாகும். முயற்சிகள் எதுவும் இன்று வேண்டாம்.

**துலாம்**
இன்று மாலைக்குள் எதிர்பார்த்த செய்தி வந்து சேரும். மாலை வரை உங்கள் எண்ணங்கள் நிறைவேறும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். நினைத்தவற்றில் ஆதாயம் அடைவீர்கள் .

**விருட்சிகம்**
உற்சாகத்துடன் செயல்படுவீர்கள். முயற்சிகள் வெற்றியாகும். ஆதாயம் அதிகரிக்கும். செல்வாக்கு உயரும். வேகமாக செயல்பட்டு நினைத்ததை நிறைவேற்றிக் கொள்வீர்கள். முயற்சிகள் லாபமாகும்.

**தனுசு**
செயல்களில் தடைகளை சந்திப்பீர்கள். செயலில் வெற்றி காண்பீர்கள். மகிழ்ச்சி அதிகரிக்கும். வேலைக்காக மேற்கொண்ட முயற்சி வெற்றியாகும். விலகிச் சென்ற உறவுகள் மீண்டும் தேடி வருவர்.

**மகரம்**
மனம் விரும்பும் வகையில் செயல்படுவீர்கள். எதிர்பார்ப்புகளை நிறைவேற்றிக் கொள்வீர்கள். உங்களது எண்ணம் இன்று எளிதாக நிறைவேறும். எதிர்பார்த்த லாபத்தை அடைவீர்கள்.

**கும்பம்**
மனதில் உற்சாகம் அதிகரிக்கும். உங்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். ஆதாயம் அதிகரிக்கும். மகிழ்ச்சி கூடும். சகோதரர்கள் ஆதரவால் உங்கள் முயற்சிகள் வெற்றியாகும். உடல்நிலை சீராகும்.

**மீனம்**
உங்கள் வருமானம் உயரும். பணியிடத்தில் மற்றவர்களை அனுசரித்துச் செல்வதின் மூலம் நன்மைகள் உண்டு. சிந்தித்து செயல்படுவதன் மூலம் சங்கடங்களில் இருந்து விடுபடுவீர்கள். பொருளாதார நிலை உயரும்.

# “அ. தி. மு. க. கட்சியை உடைப்பது திராவிட அரசியலுக்கு பாதிப்பு!”

சென்னை, டிசெ. 07

அ. தி. மு. கவை உடைப்பது திராவிட அரசியலுக்கு ஊறு விளை விக்கும் என்று திருமாவளவன் தெரிவித்தார்.

விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல். திருமாவளவன் ஜி20 மாநாடு ஆலோசனை கூட்டத்தில் கலந்து கொள்ள டில்லி புறப்பட்டு சென்றார். இதற்காக சென்னை விமான நிலையம் வந்த அவர், நிருபர்களிடம் கூறியதாவது,

ஜி20 மாநாடு இந்தியாவில் நடைபெற இருப்பது வரவேற்கத்தக்கது. இதற்காக மகிழ்ச்சி அடைகிறோம். பிரதமர் தலைமையிலான கூட்டத்தில் பங்கேற்க டில்லி செல்கிறேன். தமிழகத்தில் பா. ஜ. கவினர் நிறைய நகைச்சுவை செய்து கொண்டு இருக்கிறார்கள். பா. ஜ. க. நகைச்சுவை செய்து, அவர்களே சிரித்து கொண்டு இருக்கிறார்கள். தமிழகத்தில் பா.ஜ.க.வை கண்டு யாரும் அச்சப்பட தேவையில்லை.

தமிழ்நாட்டை குறி வைத்துள்ள பா. ஜ. க. இளையராஜா போன்றவர்களை வைத்து அரசியல் செய்யலாம் என்று கனவு காண்கிறார்கள். காசியில் தமிழ் சங்கம் என்ற பெயரில் ஒரு நாடகத்தை நடத்தி இருக்கிறார்கள்.

தமிழக மக்கள் அதை பொருட்படுத்தவில்லை. ஜெயலலிதா தலைமையில் செயல்பட்ட அ.தி.மு.க. தற்போது 4 குழுக்களாக சிதறி இருப்பது அவருக்கு செய்யும் துரோகம். ஜெயலலிதாவை தலைவராக ஏற்றுக்கொண்டவர்கள் செய்யும் துரோகம். அ. தி. மு. கவை உடைப்பது, அக்கட்சிக்கு மட்டுமல்ல தமிழ்நாடு திராவிட அரசியலுக்கு ஊறுவிளைவிப்பதாக அமையும். பா.ஜ.க. அதை பயன்படுத்தும் என்பதை அ.தி.மு.க. தொண்டர்கள் புரிந்து கொள்ள வேண்டும் - என்றார். (ஐ)

# அ. தி. மு. க. பொதுக்குழு விவகாரம் மேன்முறையீடு வழக்கு ஒத்திவைப்பு

புதுடில்லி, டிசெ. 07

அனைவரும் தயாராக இருந்தால் விசாரணையை நடத்த நாங்களும் தயராக இருக்கிறோம் என்று உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தெரிவித்தனர்.

எடப்பாடி பழனிசாமி தரப்பு கூட்டிய அ. தி. மு. க. பொதுக்குழு செல்லாது என்று ஓ.பன்னீர்செல்வம் உச்சநீதி மன்றில் மேல் முறையீடு செய்துள்ளார்.

இந்த மேன்முறையீட்டு மனு மீதான விசாரணை நேற்று உச்சநீதிமன்றில் நடைபெற்றது. அப்போது, எடப்பாடி பழனி சாமி தரப்பில் இடைக்கால உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது. கட்சிகள் விதிகளில் செய்யப்பட்ட மாற்றத்தை வழக்கை காரணம் காட்டி தேர்தல் ஆணையம் பரிசீலிக்க மறுப்பதாகவும் இடைக்கல உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்றும் எடப்பாடி பழனிசாமி தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

முன்னிலையாக வேண்டிய மூத்த வழக்கறிஞர் இல்லாததால் விசாரணையை தள்ளி வைக்க வேண்டும் என்று பன்னீர்செல்வம் வாதம் முன் வைக்கப்பட்டது.

இதையடுத்து இந்த வழக்கின் விசரணையை வரும் 12ஆம் திகதி ஒத்திவைத்துள்ளது. தேர்தல் ஆனையத்தின் நடவடிக்கை தொடர்பாக பிரமாண பத்திரம் தாக்கல் செய்யுங்கள் என்று நீதிபதிகள் தெரிவித்துள்ளனர். (ஐ)

# ஜெயலலிதா, கருணாநிதி காலத்தில் ஆளுநர்கள் இருக்கும் இடம் தெரியாது!

## நாம் தமிழர் சீமான்

சென்னை, டிசெ. 07

“ஜெயலலிதா, கருணாநிதி இருக்கும்போது ஆளுநர் எங்கே இருக்கிறார் என்றுகூட தெரியாது” என்று தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்தார்.

அம்பேத்கர் நினைவு தினத்தில் பங்கேற்று உரையாற்றிய அவர், ”அண்ணல் அம்பேத்கர் இந்த நாட்டின் பெருமை. நாடாளுமன்ற கட்டடத்துக்கு அம்பேத்கர் பெயரை வைப்பதுதான் பொருத்தமாக இருக்கும். இது அவருக்கு பெருமை அல்ல. இந்த நாட்டு மக்களுக்கு பெருமை. பா. ஜ. க. அம்பேத்கரை கொண்டாடுவதற்கு காரணம், வாக்குதான்.

ஆளுநர் 6ஆவது விரல். அதை வெட்டி எறிய வேண்டும். ஜெயலலிதா, கருணாநிதி இருக்கும்போது ஆளுநர் எங்கே இருக்கிறார்கள் என்று கூட தெரியாது. ஒன்லைன் ரம்மி தடைச் சட்ட மசோதா தொடர்பாக அரசு எடுக்கிற முடிவுக்கு ஆளுநர் ஒத்துழைக்கவில்லை” என்றார். (ஐ)

# ஆதிக்கமற்ற சமுதாயத்தை நாம் அமைத்தே தீருவோம்!

## முதல்வர் ஸ்டாலின்



சென்னை, டிசெ. 07

அம்பேத்கரின் நினைவுநாளில் ஆதிக்கமற்ற சமுதாயத்தை அமைத்தே தீருவோம் எனச் சூளுரைத்து உறுதியெடுப்போம் என்று முதல்வர் மு. க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

அம்பேத்கரின் நினைவு தினத்தை முன்னிட்டு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது ருவிற்றர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், ”ஒடுக்கப்பட்ட மக்களின் அடிமை விலங்கை ஒடிக்க புரட்சி செய்த புத்துலக புத்தர் சமத்துவத்தை நோக்கிய போராட்டப் பயணத்தில் வடக்கு கண்ட பெரியார் புரட்சியாளர் பாபாசாகேப் அம்பேத்கரின் நினைவுநாளில் ஆதிக்கமற்ற சமுதாயத்தை அமைத்தே தீருவோம் எனச் சூளுரைத்து உறுதியெடுப்போம்!” இவ்வாறு அந்த பதிவில் முதல்வர் கூறியுள்ளார்.

# உண்டியல் வசூல் 100 கோடி ரூபாய்!

மதுரை, டிசெ. 07

மதுரை மீனாட்சி அம்மன் கோவில் உண்டியல் வசூல் மூலமாக கடந்த 15 ஆண்டுகளில் 100 கோடி ரூபாய் கிடைத்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

உலகப் பிரசித்தி பெற்ற மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக்கு ஆண்டு முழுவதும் 4 கோடி பக்தர்கள், சுற்றுலாப்பயணிகள் வருகிறார்கள். மீனாட்சி அம்மன் கோயில் நிர்வாகம் சார்பில் பக்தர்களிடமிருந்து காணிக்கை வசூல் செய்ய கோயில் வளாகத்தில் பத்துக்கும் மேற்பட்ட இடங்களில் உண்டியல் வைக்கப்பட்டுள்ளன. மதுரை மீனாட்சி அம்மன் கோயில் உண்டியல் ஒவ்வொரு மாதமும் இறுதி நாள் எண்ணப்படுகிறது.

கடந்த 2008ஆம் ஆண்டு முதல் நவம்பர் 2022ஆம் ஆண்டு வரை சுமார் 100 கோடியே 20 இலட்சத்து 60 ஆயிரத்து 913 ரூபாய் உண்டியல் மூலம் வருமானம் கிடைத்துள்ளது. (ஐ)

# சர்வதேச நிதி நிறுவனங்கள் இலங்கைக்கு உதவ முன்வரும்

## நம்பிக்கை வெளியிடுகிறது சீனா

கொழும்பு, டிசெ. 07

**தற்போதைய சிரமங்களை சமாளிக்க இலங்கைக்கு உதவுவதில், சாதகமான பங்கை ஆற்றுவதற்கு தொடர்புடைய நாடுகளும் சர்வதேச நிதி நிறுவனங்களும் தம்முடன் இணைந்து செயற்படுமென சீனா நம்பிக்கை வெளியிட்டுள்ளது.**

இலங்கை உள்ளிட்ட நாடுகளுக்கான கடன் மறுசீரமைப்பு தொடர்பான விரைவான முன்னேற்றம் குறித்து ஆலோசிப்பதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் குழுவொன்று இந்த வாரம் சீனாவுக்குச் செல்லவுள்ளதாக வெளியான ஊடகச் செய்திகள் தொடர்பில் கருத்து கேட்டபோதே சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மாவோ நிங் இவ்வாறு தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் பிற சர்வதேச பொருளாதார, நிதி நிறுவனங்களுடன் சீனா நீண்டகாலமாக நல்ல ஒத்துழைப்பைக் கொண்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இலங்கையின் கடன் பிரச்னை தொடர்பாக இலங்கையின் சிரமங்கள் மற்றும் சவால்களுக்கு சீனா அதிக முக்கியத்துவம் கொடுப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பிரச்னையை சரியான முறையில் தீர்ப்பதற்கு இலங்கையுடன் வழிவகைகளை மேற்கொள்வதில் நிதி நிறுவனங்களை ஆதாரிப்பதாகவும் அவர் இதன்போது குறிப்பிட்டார்.

இலங்கையின் தற்போதைய சிரமங்களை சமாளிப்பதற்கும், அதன் கடன் சுமையைக் குறைப்பதற்கும், நிலையான அபிவிருத்தியை அடைவதற்கும் ஆக்கபூர்வமான பங்களிப்பைச் சீனா தொடரும் என தான் நம்புவதாக அவர் தெரிவித்தார். (அ)

# மாங்குளத்தில் டாங்கி மோதி சிப்பாய் மரணம்!

முல்லைத்தீவு, டிசெ. 07

மாங்குளம் கொக்காவிலில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த இராணுவ சிப்பாய் ஒருவர் பயிற்சிக்கு பயன்படுத்தப்பட்ட இராணுவத் டாங்கி மோதி உயிரிழந்ததையடுத்து மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கொக்காவிலில் உள்ள முகாமில் கடமையாற்றிய இராணுவ சிப்பாய் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார் என பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் தம்புத்தேகம சிறிமாபுர பகுதியைச் சேர்ந்த 19 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். (அ)

# கொழும்பு கிழக்கு முனையத்தை அபிவிருத்தி செய்யவுள்ள ஜப்பான்

கொழும்பு, டிசெ. 07

இலங்கை துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையத்தை ஜப்பானிற்கு வழங்கவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

வர்த்தக சம்மேளனத்தில் ஆரம்பமாகிய உச்சிமாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனை கூறினார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையத்தை அபிவிருத்தி செய்ய ஜப்பான் விரும்பியதால் அதனை வழங்க முன்வந்துள்ளோம்.

இதேவேளை, ஜப்பான் மறுப்பு தெரிவித்தால் அதனை வேறு நாடுகளுக்கு வழங்குவோம் - என்றார். (அ)

# சிறுநீரகங்கள் கடத்தலுடன் தொடர்புடைய தரகர் கைது!

கொழும்பு, டிசெ. 07

சிறுநீரகக் கடத்தலுடன் தொடர்புடைய தரகர் ஒருவர், கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டார்.

வறுமையான குடும்பங்களுக்கு பணம் பெற்றுத்தருவதாக கூறி, முன்னணி வைத்தியசாலைகளுக்கு சிறுநீரகங்களை பெற்றுக்கொடுத்த பின்னர் பணம் வழங்காமை தொடர்பில் ஐவரால் முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகளுக்கு அமையவே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

கொழும்பு 15, கஜீமா வத்தை பகுதியைச் சேர்ந்த 41 வயதான ஒருவரே ,வ்வாறு கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுநீரகங்களை பணத்திற்காக வழங்கும் நபர்கள் மற்றும் அவற்றை பெற்றுக்கொள்ளும் தரப்பினர் ஆகியோருக்கு இடை யில் சந்தேகநபர் தரகராக செயற்பட்டுள்ளதாகவும் தரகுப் பணத்திற்கு மேலதிகமாக சிறுநீரகத்திற்காக வழங்கப்பட்ட பணத்தில் ஒரு பகுதியை மோசடி செய்துள்ளதாகவும் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைக்கும் எண்ணமில்லை

## அமைச்சர் மஹிந்த அமரவீர அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 07

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை ஒத்திவைக்கும் எண்ணம் அரசாங்கத்திடம் இல்லை என அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

எனவே, உரிய நேரத்துக்குள் தேர்தல் நடத்தப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - பொருளாதார நெருக்கடிகள் இருந்தாலும், உள்ளூராட்சி தேர்தலை பிற்போடும் திட்டம் எதுவும் இல்லை. திட்டமிட்டவாறு தேர்தல் நடத்தப்படும்.

தங்களுக்குத்தான் மக்கள் ஆதரவு உள்ளது என மார்தட்டிக்கொள்ளும் எதிரணிகளுக்கும் மக்கள் யார் பக்கம் என்பதை தெளிவாக பார்க்க முடியும்.

எனவே, தேர்தலுக்கு தயாராகுமாறு கட்சி தலைவர்களுக்கு சவால் விடுக்கிறேன்.

நாட்டு மக்கள் தேர்தலைக் கோரவில்லை. அரசியல் கட்சிகள்தான் துடிக்கின்றன.

நாடு பற்றி எரியும்போது, அதனை அணைப்பதற்கு ஒத்துழைக்காத தரப்புகளுக்கு தேர்தல் ஊடாக மக்கள் பாடம் புகட்டுவார்கள் - என்றார். (அ)

# சிறப்பு சொற்பொழிவு

யாழ்ப்பாணம், டிசெ. 07

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி ஆலயத்தில் நடத்தப்படும் வாராந்த சிறப்பு சொற்பொழிவு கோயிலின் சண்முக விலாச மண்டபத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெறும்.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் இந்த நிகழ்வில் தலைமை உரையை பரிபாலன சபைத் தலைவர் த. சோதிலிங்கம் ஆற்றுவார்.

சிறப்புச் சொற்பொழிவை இளம்சைவப்புலவர் த. மனோஜ்குமார் "நாதன் நாமம் நமசிவாயவே" என்ற தலைப்பில் ஆற்றுவார். (ஐ)

# ரணிலும் ராஜபக்ஷக்களும் ஒன்றே உடைகள் மாத்திரமே வித்தியாசம்!

## ஹர்ஷன ராஜகருணா தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 07

ராஜபக்ஷக்கள் செய்த பணியையே இன்று ஜனாதிபதியும் செய்கின்றார் எனவும், உடைமாற்றம் மாத்திரமே வித்தியாசம் எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்தார்.

இலாபம் ஈட்டும் நிறுவனங்கள் கூட விற்பனை செய்யப்படுவதே அதற்கு சிறந்த உதாரணம் என அவர் சுட்டிக்காட்டினார்.

இலாபமீட்டாத மத்தள மற்றும் ஸ்ரீலங்கன் விமான சேவைகளை மறுசீரமைப்பதில் எவ்வித பிரச்சினையும் இல்லை எனவும், இலாபம் ஈட்டும் நிறுவனங்களை விற்பனை செய்வதை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் ராஜகருணா தெரிவித்தார். (அ)

# பதவி விலகல் தகவல் இதுவரை தெரியாது!

## கூறுகிறார் இ.போ.ச. தலைவர்

கொழும்பு, டிசெ. 07

இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க, தனது பதவி விலகல் தொடர்பில் இதுவரையில் தமக்கு அறிவிக்கப்படவில்லை என தெரிவித்துள்ளார்.

ஊடக அறிக்கை ஒன்றின் மூலமே தமக்கு இது தெரியவந்ததாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை போக்குவரத்துச் சபையின் பணிப்பாளர் சபை, தலைவர் மற்றும் உறுப்புரிமை ஆகியவற்றிலிருந்து விலகுமாறு கிங்ஸ்லி ரணவக்கவை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்த்தன அறிவித்துள்ளார் என அமைச்சு நேற்று முன்தினம் பிற்பகல் அறிவித்தது.

மகும்புர பல்நோக்கு நிலையத்தில் இருந்து கொழும்பு கோட்டை வரையான 'சிற்றி பஸ்' சேவை தமக்கு அறிவிக்காமல் திடீரென நிறுத்தப்பட்டுள்ளதாக வெளியான தகவலையடுத்து இ.போ.ச. தலைவர் தனது பதவியை ராஜினாமா செய்யுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் கிங்ஸ்லி ரணவக்க நள்ளிரவு பேஸ்புக்கில் பதிவொன்றை இட்டுள்ளார்.

அதில், நேரம் இரவு 11.48. இன்று மாலை முதல் பிரேக்கிங் நியூஸ் மற்றும் முக்கிய ரி.வி செய்திகளில் என்னை விலகிச் செல்லுமாறு கூறப்பட்டுள்ளது. இதுவரை யாரும் என்னிடம் சொல்லவில்லை என்று முதலில் சொல்லவேண்டும். எனக்கு இன்னும் தெரியாது. ஒரு குடிமகனாக, நான் இதுபோன்ற நிறுவனத்தில் பணிபுரியும்போது, நாட்டு மக்களுக்கு பதில் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். என்னை நீக்குவதற்கு நான் ஏதாவது தவறு செய்திருந்தால், பொதுமக்களிடம் மன்னிப்பு கேட்டுவிட்டு வெளியேறத் தயாராக இருக்கிறேன். ஆனால், எனது தவறு என பொதுவெளியில் கூறி, நான் பகிரங்கமாக பதிலளிக்க வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. அமைச்சர்கள் குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்றால், அந்த முட்டாள் சொல்வதை நாங்கள் செய்யவேண்டிய கட்டாயத்தில் உள்ளோம் என்று சில அமைச்சர்கள் நினைக்கிறார்கள். அந்த நாட்கள் போய்விட்டன.



பொதுமக்களுக்கு பதில் சொல்லவேண்டும். அமைச்சர்களுக்கு உள்ள அதே உரிமைகள் சாலையில் பிச்சை எடுப்பவர்களுக்கும் உண்டு என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். இல்லையேல் பொதுமக்களாகிய நாம் விளக்கமளிக்கவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பஸ் கட்டணம் குறையாது

கொழும்பு, டிசெ. 07

டீசல் விலை குறைக்கப்பட்டாலும் பஸ் கட்டணம் குறைக்கப்படமாட்டாது என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் பெற்றோலியக் கூட்டுதாபனத்தின் ஒட்டோ டீசல் ஒரு லீற்றரின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது

இந்தநிலையில் டீசல் விலை குறைப்பு தொடர்பில் கருத்துரைத்துள்ள இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன, அது பஸ் கட்டணங்களில் தாக்கம் செலுத்தக் கூடிய அளவில் இல்லை என குறிப்பிட்டார்.

ஒரு லீற்றர் டீசலின் விலை 35 முதல் 40 ரூபாவினால் குறைக்கப்பட்டால் பஸ் கட்டணத்தை குறைக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (அ)

# வலுவடையும் தாழமுக்கம்: மீனவர்களுக்கு எச்சரிக்கை



கொழும்பு, டிசெ. 07

தென் கிழக்கு வங்காள விரிகுடா கடற்பரப்பில் மறு அறிவித்தல் வரை மீன்பிடியில் ஈடுபடவேண்டாம் என மீனவர்களுக்கு எச்சரிக்கை அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த கடற்பரப்பில் தற்போது மீன்பிடியில் ஈடுபட்டு வரும் மீனவர்களை விரைவில் கரைக்கு அல்லது பாதுகாப்பான பகுதிகளுக்கு பயணிக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

மன்னார் முதல் காங்கேசன்துறை வரை, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்திற்கு அப்பாலுள்ள ஆழ்கடல் மற்றும் ஆழமற்ற கடற்பகுதிகளை பயன்படுத்துவதை தவிர்க்குமாறு திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

தெற்கு அந்தமான் தீவு கடற்பகுதி மற்றும் தென் கிழக்கு வங்காள விரிகுடாவை அண்மித்த வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள குறைந்த தாழமுக்கமானது தாழமுக்கமாக வலுவடைவதால் இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த சூறாவளி எதிர்வரும் 08 ஆம் திகதி தமிழகக் கரையை கடக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுவதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (அ)

# அத்தியாவசிய மருந்து வகைகள் கிடைக்க வழி செய்யவேண்டும்!

## யாழ்ப்பாணத்தில் நேற்று போராட்டம்




யாழ்ப்பாணம், டிசெ. 07

பெண்களின் சுகாதார உரிமைகளை உறுதிப்படுத்தக் கோரி யாழ்.மாவட்ட செயலகம் முன்பாக நேற்று செவ்வாய்க்கிழமை கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு-கிழக்கு பெண்கள் ஒன்றியத்தினால் , முன்னெடுக்கப்பட்ட குறித்த போராட்டத்தில், அத்தியாவசிய மருந்து வகைகளும் மருத்துவ சாதனங்களும் மக்களுக்கு கிடைக்க வேண்டும், மருந்துகளை உடனடியாக பெற வழி வகை செய்ய வேண்டும், பெண்களின் சுகாதார உரிமை உறுதிப்படுத்த வேண்டும், சுகாதார உரிமை எமது உரிமை போன்ற வாசகங்கள் அடங்கிய அட்டைகளுடன் போராட்டத்தில் கலந்துகொண்டனர். (அ)

# பிரதமர் பதவியில் மாற்றம் ஏற்படாது

கொழும்பு, டிசெ. 07

பிரதமர் பதவியில் தினேஷ் குணவர்தன நீடிக்கப்படவேண்டுமென மொட்டு கட்சியின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளதால், பிரதமர் பதவியில் மாற்றம் வராது என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

பிரதமராக செயற்படும் தினேஷ் குணவர்தனவை நீக்கிவிட்டு, அந்த இடத்துக்கு மொட்டு கட்சி பிரமுகர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டுமென மொட்டு கட்சி எம்.பிக்கள் சிலர் கட்சி தலைமைப்பீடத்திடம் கோரியிருந்தனர். இதனால் பிரதமர் பதவி குறித்து பலகோணங்களில் தகவல்கள் கசிந்தன.

இந்நிலையில் தினேஷ் குணவர்தன சிறப்பாக செயற்படுகின்றார். அவர் பதவியில் நீடிக்கப்பட வேண்டும் என மொட்டு கட்சியின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர். (அ)

# ருஹுணு கல்வியியற் கல்லூரி மாணவர் 54 பேர் இடைநிறுத்தம்

கொழும்பு, டிசெ. 07

அண்மையில் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பில் ருஹுணு தேசிய கல்வியியற் கல்லூரியின் 54 மாணவர்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

ருஹுணு தேசிய கல்வியியற் கல்லூரிக்குள் அண்மைக்காலமாக ஏற்பட்ட முரண்பாடுகள் தொடர்பில் கல்வி அமைச்சு அவதானம் செலுத்தியுள்ளதாக கல்லூரி ஆணையாளர் ரஞ்சித் சந்திரசேகர தெரிவித்தார்.

இதன்படி, மாணவர்களின் ஒழுக்கத்தைப் பேணுவதற்கான அதிகபட்ச நடவடிக்கைகளை எடுக்குமாறு அமைச்சு உத்தரவுகளை வழங்கியது.

இதனடிப்படையில் சம்பவத்துடன் தொடர்புடைய 54 மாணவர்களை இடைநிறுத்துவதற்கு தீர்மானம் எட்டப்பட்டதாகவும் அவர் கூறினார்.

ருஹுணு கல்வியியல் கல்லூரியால் நடத்தப்படும் ஒழுக்காற்று விசாரணைக்கு மேலதிகமாக கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் தலைமையில் தனியான விசாரணையும் முன்னெடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. (அ)




# பெண்களின் சுகாதார உரிமையை உறுதி செய்யக் கோரி போராட்டம்!

## கிளிநொச்சியில் நேற்று நடந்தது

கிளிநொச்சி, டிசெ. 07

பெண்களுக்கான சுகாதார உரிமைகளை உறுதி செய்யக் கோரி வடக்கு-கிழக்கு பெண்கள் ஒன்றியத்தினால் போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சி வைத்தியசாலை முன்பாக ஆரம்பமானது.

வடக்கு-கிழக்கு பெண்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம் பெற்ற குறித்த போராட்டத்தில் மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களிலிருந்தும் மக்கள் கலந்துகொண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மாவட்ட வைத்தியசாலைக்குச் செல்லும் மக்களுக்கான சுகாதார வசதிகள் குறைவு காணப்படுவது தொடர்பிலும், சில மருந்துப் பொருட்களை வெளியில் பெற்றுக்கொள்ள பணிப்பது தொடர்பிலும் அதிருப்தி வெளியிட்டும், சுகாதார உரிமைகளை உறுதி செய்யக் கோரியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (அ)

# வேலணை பிரதேச சபையின் வரவு-செலவுத் திட்டம் வெற்றி

யாழ்ப்பாணம், டிசெ. 07

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஆளுகைக்குட்பட்ட வேலணை பிரதேச சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் எட்டு மேலதிக வாக்கினால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வேலணை பிரதேச சபையின் வரவு-செலவுத் திட்டத்திற்கான விசேட கூட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை சபையின் தவிசாளர் ந. கருணாகரகுருமூர்த்தி தலைமையில் இடம்பெற்றது.

பலத்த விவாதத்துக்கு பின்னர் தவிசாளர் ந.கருணாகரகுருமூர்த்தியால் வாக்கெடுப்புக்கு கோரப்பட்டபோது இலங்கை தமிழரசுக் கட்சியின் எட்டு உறுப்பினர்களும் வாக்கெடுப்பை புறக்கணிப்பதாக தெரிவித்து வெளிநடப்பு செய்தனர்.

வரவு-செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக 9 உறுப்பினர்களும், எதிராக ஒரு உறுப்பினரும் ஒரு உறுப்பினர் நடுநிலைமையையும் வகித்திருந்தனர்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் 6 உறுப்பினர்கள், சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் 2 உறுப்பினர்கள், தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஒரு உறுப்பினர் என 9 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்திருந்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு உறுப்பினர் எதிர்த்து வாக்களித்ததுடன் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் நடுநிலை வகித்தார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு உறுப்பினர் நேற்றைய கூட்டத்திற்கு வருகை தரவில்லை. (அ)

# “மே 9 வன்முறை சம்பவங்கள் விசாரணை அறிக்கை எங்கே?”

கொழும்பு, டிசெ. 06

இலங்கையில் கடந்த மே மாதம் 09 ஆம் திகதி இடம்பெற்ற வன்முறை சம்பவங்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையை உடனடியாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ வலியுறுத்தினார்.

பாராளுமன்றம் நேற்று முன்தினம் முற்பகல் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது.

இதன்போது கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

“கடந்த மே 09 ஆம் திகதி நாட்டில் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற வன்முறை சம்பவங்கள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க அப்போதைய ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷவால் ஐவர் அடங்கிய குழு நியமிக்கப்பட்டது.

தற்போதைய ஜனாதிபதியிடம் மேற்படி குழுவினர் அறிக்கை சமர்ப்பித்துள்ளதாக அறிய முடிகிறது. இருப்பினும் அறிக்கையின் உள்ளடக்கம் இதுவரை பகிரங்கப்படுத்தப்படவில்லை

நாட்டு மக்களின் வரிப்பணத்தின் ஊடாக இந்த குழுவின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. அந்த அறிக்கையின் உண்மை தன்மையை அறிந்துகொள்ளும் உரிமை நாட்டு மக்களுக்கு உண்டு. ஆகவே நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும்.” - என வலியுறுத்தினார்.

இதற்கு பதிலளித்த சபை முதல்வர், அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, குழுக்களை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. குழுவினர் ஜனாதிபதியிடம் அறிக்கை சமர்ப்பிப்பார்கள்.

தற்போதைய ஜனாதிபதியிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா என்பதை அறியவில்லை. இவ்விடயம் தொடர்பில் கவனம் செலுத்தப்படும் - எனக் குறிப்பிட்டார். (அ)

# வரவு-செலவுத் திட்ட அலுவலகத்தை பாராளுமன்றத்தில் அமைக்க முடிவு

கொழும்பு, டிசெ. 07

பாராளுமன்றத்தில் வரவு-செலவுத் திட்ட அலுவலகம் ஒன்றை நிறுவுவதற்கான சட்ட மூலத்தை தயாரிக்குமாறு சட்ட வரைவு ஆசிரியருக்கு அரசாங்கம் அறிவுறுத்தியுள்ளது.

அதற்கான சட்டமூலம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் கடந்த ஒக்ரோபர் 31ஆம் திகதி அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டது.

அமைச்சரவைக் கூட்டத்தின் போது, வரைவுச் சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் உள்ள அனைத்துக் கட்சித் தலைவர் களுக்கும் அனுப்பி வைத்து, வரைவில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் குறித்து அவர்களின் கருத்துக்களைப் பெறுவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதன்படி, பிரதமர் இது தொடர்பான ஆரம்ப சட்ட மூலம் குறித்து கட்சித் தலைவர்க ளுடன் கலந்துரையாடியதுடன், கலந்துரையாடலின் போது முன் வைக்கப்பட்ட ஆலோசனைகள் அமைச்சரவையின் பரிசீலனைக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இதன்படி, முன்வைக்கப்பட்ட கருத்துக்களை கருத்திற்கொண்டு சட்டமூலமொன்றை தயாரிக்குமாறு சட்ட வரைவு ஆசிரியருக்கு அறிவுறுத்துவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது. (அ)

# பால் உற்பத்தியை அதிகரிக்க திட்டம்

கொழும்பு, டிசெ. 07

உள்ளூர் பால் உற்பத்தியை அதிகரிக்க அவசியமான சிறு, நடுத்தர மற்றும் நீண்ட காலத் திட்டத்தை தயாரிக்கும் நோக்கில் இந்திய தேசிய பால்பண்ணை மேம்பாட்டுச் சபையின் பல்துறை குழுவுடன் இணைந்து செயற்படுவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நாட்டின் அரச மற்றும் தனியார்துறை பிரதிநிதிகள் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்படும் பால்மா பாவனையை குறைப்பதற்காகவும் உள்ளூர் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காகவே குறித்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

சிறு, நடுத்தர மற்றும் நீண்ட கால திட்டத்தை தயாரிக்கும் நோக்கில் இந்திய தேசிய பால் பண்ணை மேம்பாட்டுச் சபையின் பல்துறை குழுவுடன் இணைந்து செயற்படுவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அரச மற்றும் தனியார் துறை பிரதிநிதிகள் அடங்கிய குழுவொன்றை நியமித்துள்ளார்.

இந்தவிடயம் தொடர்பில், இந்தியாவின் தேசிய பால்பண்ணை மேம்பாட்டுச் சபையும், இந்தியாவின் அமுல் பால் நிறுவனமும் இணைந்து திரவப் பால் உற்பத்திக்கு தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கான ஆரம்பகட்ட பேச்சு நேற்று முன் தினம் காலை ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

அத்துடன், நீண்டகால திட்டத்தினூடாக இலங்கையை பால் உற்பத்தியில் தன்னிறைவடையச் செய்வதே இதன் பிரதான நோக்கம் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

# தேசிய பாதுகாப்பை உறுதி செய்ய திருத்தப்பட்ட பாதுகாப்பு கொள்கை

## பாதுகாப்புச் செயலர் கமால் குணரட்ண தகவல்



கொழும்பு, டிசெ. 07

தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதற்காக திருத்தப்பட்ட தேசிய பாதுகாப்பு கொள்கை முன்னெடுக்கப்படும் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமால் குணரட்ண தெரிவித்துள்ளார்.

போர்க்களத்தில் வெற்றி என்பது சூழ்நிலைகளை புரிந்துகொண்டு வெற்றி பெறுவதற்கான துணிச்சல் கொண்ட தலைவரை பொறுத்தது என அவர் கூறினார்.

கொழும்பில் உள்ள பாதுகாப்பு சேவைகள் கட்டளை மற்றும் பணியாளர் கல்லூரியில் இடம் பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஒரு அதிகாரியின் தொழில் முறையுடன் பின்னிப்பிணைந்த ஞானமும் அறிவும் முதன்மையாக கருதப்படுகின்றது. ஒரு போரின் இறுதி நிலையை இவை தீர்மானிக்கும்.

நாட்டுக்கு வலுவான பாதுகாப்பு பொறிமுறை அவசியம். பல வருடங்களுக்கு முன்னர் உருவாக்கப்பட்ட தேசிய பாதுகாப்புக் கொள்கையை மீளாய்வு செய்வதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துள்ளது.

திருத்தப்பட்ட தேசிய பாதுகாப்புக் கொள்கை மற்றும் மூலோபாயம் உள்ளடக்கிய எதிர்காலம் குறித்து கவனம் செலுத்தும் தேசிய பாதுகாப்பு பொறி முறையை வலுப்படுத்துவதற்கான புதிய உத்வேகத்தை அளிக்கும்.

அச்சுறுத்தல்களை தணிக்கவும் பாதுகாப்பான மற்றும் செழிப்பான நாட்டை உறுதி செய்யவும் செயல்ஊக்கம் மிக்க நடவடிக்கைகளை எடுப்பதற்கு தேசிய பாதுகாப்பு இயந்திரத்திற்கு இது தெளிவான கட்டமைப்பை வழங்கும்- என்றார். (அ)

# மாணவன் ஒருவரை பாவித்து போதைப்பொருள் விநியோகம்

## நால்வர் ஹொரணையில் கைது

கொழும்பு, டிசெ. 07

பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து பாடசாலை மாணவர் ஒருவரின் ஊடாக ஐஸ் போதைப்பொருள் மற்றும் போதைப்பொருள் விற்பனை செய்த நால்வர் ஹொரணை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்களிடம் 13 கிராம் ஐஸ் போதைப் பொருள் மற்றும் 120 மாத்திரைகள் இருந்ததாக விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் தொடர்பில் கிடைத்த தகவலின் பிரகாரம் நேற்று முன்தினம் மில்லனிய மற்றும் பரகஸ்தோட்டை ஆகிய பிரதேசத்தில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

18 வயதுடைய பாடசாலை மாணவர் ஒருவரின் ஊடாக இந்த போதைப்பொருட்களை மாணவர்களுக்கு விற்பனை செய்ததாக விசேட அதிரடிப் படையினர் தகவல் வெளியிட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் மில்லனிய பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (அ)

# யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் மருத்துவ மாணவர் ஆராய்ச்சி மாநாடு



யாழ்ப்பாணம், டிசெ. 07

யாழ்ப்பாணப்பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் ஐந்தாவது மருத்துவ மாணவர் ஆராய்ச்சி மாநாடு நேற்று முன் தினம் திங்கட்கிழமை மருத்துவ பீட கூவர் அரங்கில் இடம்பெற்றது.

“ஆராய்ச்சியினூடான ஞானம் - றுளைனழஅ வாசழரபா சுநளநயசஉா” என்ற தொனிப் பொருளில் இடம்பெற்ற இந்த மருத்துவ மாணவர் ஆராய்ச்சி மநாட்டில் பேர்மிங்ஹாம் பல்கலைக்கழகத்தின் பிரயோக சுகாதார ஆராய்ச்சி நிறுவனத்தை சேர்ந்த சுகாதார தரவு அறிவியல் மற்றும் பொது சுகாதாரப் பேராசிரியர் கிருஸ்ணராஜா நிரந்தர குமார் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு முதன்மை உரையாற்றினார்.

நிகழ்வில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் இ.சுரேந்திரகுமாரன், மருத்துவ பீடத்தைச்சேர்ந்த பேராசிரியர்கள், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், மருத்துவ பீட விரிவுரையாளர்கள் மற்றும் மருத்துவ பீடத்தின் 40ஆம், 41ஆம் மற்றும் 42 ஆம் அணிகளைச் சேர்ந்த மாணவர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

40 ஆம் அணி மருத்துவ மாணவர்களால் சுமார் 30 ஆராய்ச்சிச் சுருக்கங்கள் இந்த ஆய்வு மாநாட்டில் முன் வைக்கப்பட்டன. “நாள்பட்ட நோய்களும், பராமரிப்பும்”, “பெண்கள் - குழந்தைகளுக்கான ஊட்டச் சத்தும், அறிவூட்டலும்”, “பெருந்தொற்றுப் பரவல் அபாயம்” ஆகிய மூன்று தலைப்புகளில் ஆராய்ச்சி அமர்வுகள் இடம் பெற்றன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடம் மற்றும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையைச் சேர்நத நிபுணர்கள் அடங்கிய மதிப்பீட்டுக் குழுவினால் வழங்கப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட ஆராய்சிச் சுருக்கங்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன. (அ)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கான பொறுப்பை தனிப்பட ஏற்கமுடியாது

## மைத்திரிபால சிறிசேன கூறுகின்றார்



கொழும்பு, டிசெ. 07

2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை தடுக்காமைக்கான பொறுப்பை தனிப்பட்ட ரீதியில் ஏற்றுக்கொள்ள முடியாது என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

தாம் தற்போது நாட்டின் ஜனாதிபதியாக இல்லாத காரணத்தினால் தாக்குதல்களில் பாதிக்கப்பட்டவர்கள் தமக்கெதிராக அன்றி அரசாங்கத்துக்கு எதிராக வழக்கை தொடர்ந்து நஷ்டஈடு கோரவேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்களின் பிரதிவாதி பட்டியலிலிருந்து தம்மை நீக்குமாறு முன்னாள் ஜனாதிபதி சிறிசேனவினால் ஏற்கனவே முன்வைக்கப்பட்ட கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

இந்த தீர்ப்புக்கு எதிராக மைத்திரிபால சிறிசேனவால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேன்முறையீட்டு மனு எதிர்வரும் 28ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. (அ)

# இனநெருக்கடி தீர்வுக்கு இந்திய முன்மாதிரி பயனுடையதாக அமையும்!



கலாநிதி ஜெகான் பெரேரா

இனத்துவ சமூகங்களுக்கிடையிலான சர்ச்சைக்குரிய அதிகாரப்பரவலாக்கல் பிரச்சினைக்கான தீர்வின் ஒரு பகுதியாக மாவட்டசபைகளை பரிசீலிக்கலாம் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்த கருத்து தமிழ் சமூகத்தின் மத்தியில் கணிசமான கோபத்தை ஏற்படுத்தியிருக்கிறது. தேசிய நல்லிணக்கச் செயன்முறையை துரிதப்படுத்துவது குறித்தும் ஜனாதிபதி பேசுகின்ற நிலையில் இது அதிர்ச்சியையும் ஏமாற்றத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது.

செலவினங்களைக் குறைக்கும் ஒரு நடவடிக்கையாக மாகாணசபைகளின் கீழ் மாவட்டசபைகளை அமைப்பது குறித்து முனானாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாராளுமன்றத்தில் யோசனை கூறியபோது விக்கிரமசிங்க மாவட்டசபைகளை மீண்டும் அறிமுகப்படுத்த தயார் என்று பதிலளித்தார். 'முனானாள் ஜனாதிபதி அவர்களே, மாவட்ட அபிவிருத்தி சபைகள் தொடர்பான உங்கள் கருத்துக்களை கவனித்தேன். அதைச் செய்வதற்கு நான் தயார்" என்று ஜனாதிபதி கூறியதாக தெரிவிக்கப்பட்டது. ஆனால், மாகாண சபைகளுக்குள் மாவட்ட அபிவிருத்து குழுக்களை அமைக்கலாம் என்ற அர்த்தத்திலேயே ஜனாதிபதி பேசினார் என்று பிறகு அவரின் ஊடகப்பிரிவு விளக்கமளித்தது.

சகல நிறைவேற்று தீர்மானங்களை மேற்கொள்வதற்கு வசதியாக அரசாங்கம்,மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகளுக்கிடையில் ஒருங்கிணைப்புக்கான ஒரு களத்தை மாவட்ட அபிவிருத்தி சபைகள் வழங்கும் என்று ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு மேலும் கூறியது. மாவட்டத்தை அதிகாரப்பரவலாக்கல் அலகாகக் கொண்ட கோட்பாடு ஜனாதிபதியின் மாமனார் காலஞ்சென்ற ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனவினால் முன்னர் 1981 ஆம் ஆண்டில் முயற்சித்துப் பார்க்கப்பட்டது. மோசமடைந்து கொண்டிருந்த இனநெருக்கடிக்கான தீர்வின் ஒரு பகுதியாக ஜெயவர்தன அரசாங்கம் மாவட்ட அபிவிருத்தி சபைகளை ஏற்படுத்தியது.

வளர்ந்துகொண்டிருந்த தமிழ்த் தீவிரவாதத்தை கட்டுப்படுத்துமாறு பாதுகாப்பு படைகளுக்கு உத்தரவிடப்பட்டது. படைகளிடம் துப்பாக்கிகள் மாத்திரம் இருக்கவில்லை. பயங்கரவாதத் தடைச்சட்டமும் இருந்தது. இன்று துஷ்பிரயோகம் செய்யப்படுவதைப் போன்றே அன்றும் அந்த சட்டம் துஷ்பிரயோகம் செய்யப்பட்டது. ஆனால் அன்று மிகவும் மோசமாக துஷ்பிரயோகங்கள் இடம்பெற்றன.

தமிழ் சமூகத்தைப் பொறுத்தவரை, மாவட்ட அபிவிருத்தி சபைகளுடனான குறுகிய கால அனுபவம் கசப்பானதாகவே இருந்தது. அந்த சபைகளுக்கான தேர்தல்களில் அன்றைய ஜனாதிபதி தலைமயிலான ஐக்கிய தேசிய கட்சியும் போட்டியிட்டது. மோசடிகளைச் செய்து எந்தவகையில் என்றாலும் தேர்தல்களில் வெற்றிபெறுவதற்கு அரசாங்கம் மேற்கொண்ட முயற்சி 1981ஆம் ஆண்டில் யாழ்ப்பாண பொதுநூலகம் தீக்கிரையாக்கப்பட்ட அனர்த்தத்தில் முடிந்தது.

நாட்டின் ஏனைய பாகங்கள் பொறாமைப்படக்கூடியதாக அமைந்த வடக்கின் உயர்ந்த கல்வித்தரத்தை உருவகித்து நின்ற பெறுமதிமிக்க நிறுவனங்களில் ஒன்றாக விளங்கியது அந்த நூலகம். அதனால் ஜனாதிபதியின் பேச்சில் மாவட்ட அபிவிருத்தி சபைகள் பற்றிய குறிப்பை உடனடியாக அவரின் ஊடகப்பிரிவு மறுதலித்ததில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.



மாவட்ட சபைகள் முறைக்கு புத்துயிர் அளிப்பதற்கான தனது விருப்பம் தொடர்பில் ஜனாதிபதி தெரிவித்த மறைபுதிரான கருத்தின் உண்மையான அர்த்தத்தைப் பொறுத்தவரை அவரின் ஊடகப்பிரிவு அளித்த விளக்கத்தை நம்பமுடியும். ஆனால், சகல நிறைவேற்று தீர்மானங்களுக்காகவும் மத்திய அரசாங்கம், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகளுக்கிடையில் ஒருங்கீணைப்புக்கான ஒரு களமாக மாவட்ட சபைகளை உருவாக்கும் யோசனை மிகவும் சிக்கலானதாகும். பல்வேறு கமிட்டிகள் ஊடாக தீர்மானம் மேற்கொள்ளும் எந்தவொரு சாத்தியத்தையும் அது இல்லாமல் செய்துவிடக்கூடிய ஆபத்து இருக்கிறது.

அரசாங்கத்தின் ஒரு மட்டத்திற்குள் ஒருங்கிணைப்பே போதுமானளவு சிக்கலாக இருக்கிறது. பல்வேறு மட்டங்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு மேலும் சிக்கலாக இருக்கும். சாரதி ஆசனத்தில் இருவர் இருந்தால் என்ன நடக்குமோ அது போன்ற பிரச்சினையே இது. மாவட்ட செயலாளராகவும் பணியாற்றும் அரசாங்க அதிபர் யாருக்கு பொறுப்புக்கூறுவது? மத்திய அரசாங்கத்தின் பிரதியமைச்சரும் மாகாண அமைச்சரும் ஒரு உத்தியோகபூர்வ கூட்டத்தில் பங்கேற்கும்போது பின்பற்றப்படவேண்டிய நடைமுறை என்ன?

இந்த கேள்விகள் கடந்த காலத்தில் கிளப்பப்பட்டிருந்தன. பல கேள்விகளுக்கு விடை கிடைக்கவில்லை. பல அதிகாரப்பரவலாக்கல் அலகுகள் மேலும் குழப்பத்தை உருவாக்கும். இனநெருக்கடிக்கான தீர்வாக மாவட்ட சபைகள் யோசனையின் பொருத்தமின்மையை இன்னொரு பிரச்சினையின் ஊடாகவும் விளங்கிக்கொள்ளமுடியும்.

இனநெருக்கடிக்கான தீர்வாகவும் ஒவ்வொரு மாகாணத்தினதும் மக்களின் விருப்பங்களை பிரதிநிதித்துவப்படுத்துவதற்காகவும் ஏற்படுத்தப்பட்ட மாகாணசபைகள் தற்போது எதையும் செய்யவில்லை. மக்கள் பிரதிநிதித்துவத்தைப் பொறுத்தவரை அவை செயற்பாடின்றி கிடக்கின்றன.

கடந்த நான்கு வருடங்களாக மாகாணசபைகள் ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் ஆளுநர்களினால் நிருவகிக்கப்படும் நிருவாக அமைப்புக்களாகவே இயங்கி வருகின்றன. மாகாண மக்களுடன் கலந்தாலோசிக்காமல் ஆளுநர் தன்னெண்ணப்படி செயற்படலாம். இந்த காலப்பகுதியில் மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்படவில்லை. பரவலாக்கப்பட்ட அதிகாரங்கள் கொண்ட நிறுவனங்களாக அன்றி மாகாணசபைகள் இப்போது துரதிர்ஷ்டவசமாக அரசின் மத்திய அதிகாரத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் அமைப்புகளாகவே விளங்குகின்றன.

நான்கு வருடங்களாக தேர்தல்களை நடத்த அனுமதிக்காமல் ஜனநாயக விரோத வழிமுறைகள் மூலமாக மாகாண சபைகளை வலுவிழக்கச்செய்த அரசாங்கத்தின் செயல் அந்த சபைகளை தமிழ்ச் சமூகம் நிராகரிப்பதற்கே ஊக்கம் கொடுக்கிறது.

இனநெருக்கடிக்கான தீர்வின் பிரதான ஜனநாயக அங்கமாக மாகாண சபைகள் 1987 ஆம் ஆண்டில் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டன. உள்ளூர் மட்டத்தில் பொருத்தமான விவகாரங்கள் தொடர்பில் தீர்மானிப்பதற்கு ஒவ்வொரு மாகாணத்தின் மக்களுக்கும் அதிகாரத்தை வழங்குவதே மாகாண சபைகளின் நோக்கம். ஆனால் அந்த உரிமை அவர்களுக்கு மறுக்கப்பட்டிருக்கிறது.




சமஷ்டி முறைக்கான கோரிக்கை மீண்டும் முன்னரங்கத்துக்கு வந்திருப்பதற்கு இதுவே பிரதான காரணம். 'தற்போது நடைமுறையில் உள்ள அரசுக்குள் சமஷ்டி முறையிலான அரசாங்கம் ஒன்றுக்காக குரல்கொடுப்பதை பிரிவினைவாதத்துக்காக குரல்கொடுப்பதாக கருதமுடியாது" என்று 2017 ஆகஸ்டில் அன்றைய பிரதம நீதியரசர் பிரியசத் டெப் தலைமையிலான உயர்நீதிமன்ற அமர்வு தீர்ப்பளித்தது.

இலங்கை தமிழரசு கட்சி தனியரசு ஒன்றை தோற்றுவிப்பதை அதன் நோக்கமாக - இலக்காக கொண்டிருக்கிறது என்று தாக்கல் செய்யப்பட்ட மனுவை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

நேர்மறையான பிரதிபலிப்பு

இலங்கையின 75 வது சுதந்திர தினம் அளவில் இனநெருக்கடிக்கு தீர்வொன்றைக்காண தான் நோக்கம் கொண்டுள்ளதாக ஜனாதிபதி செய்த அறிவிப்புக்கு பெரிய தமிழ் அரசியல் அணியான தமிழ் தேசிய கூட்டமைப்பு (தமிழரசு கட்சியை பிரதான அங்கத்துவ கட்சியாகக் கொண்டது) அனுகூலமான முறையில் பதிலளித்திருக்கிறது. சமஷ்டி அடிப்படையில் தீர்வொன்று காணப்படவேண்டும் என்று தாங்கள் விரும்புவதாக அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

உலகின் சனத்தொகையில் 40 சதவீதத்துக்கும் அதிகமான மக்களைக் கொண்ட 25 க்கும் அதிகமான நாடுகள் சமஷ்டி முறையைக் கொண்டிருப்பதாகவும் அவை ஐக்கியப்பட்டவையாக இருப்பதாகவும் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் சுட்டிக்காட்டியிருக்கிறார். அமெரிக்கா, இந்தியா, சுவிட்சர்லாந்து மற்றும் மலேசியா போன்றவை சமஷ்டி அரசுகளுக்கு உதாரணங்களாகும்.

ஒரு மாகாணசபை ஆட்சிசெய்யப்படுகின்ற வகைமுறையை மத்திய அரசாங்கத்தினால் மாற்றமுடியாமல் இருக்கும் என்பதே சமஷ்டி அரசின் முக்கிய அம்சமாகும். குறிப்பாக நான்கு வருடங்களுக்கு மாகாணசபை தேர்தலை நியாயமில்லாத வகையில் நடத்தாமல் தனது விருப்பத்தின் பேரில் ஆளுநர்களை வைத்து மாகாணங்களை அரசாங்கத்தினால் நிருவகிக்க முடியாமல் இருக்கும்.

மறுபுறத்தில், 1950 களில் தொடங்கி தமிழ் அரசியல் சமுதாயம் சமஷ்டி முறைக்கான கோரிக்கையை முன்வைத்த நேரத்தில் இருந்து சிங்கள அரசியல் சமுதாயம் அது நாட்டின் தேசிய சுயாதிபத்தியத்துக்கும் பாதுகாப்புக்கும் ஆபத்தானது என்று கூறி நிராகரித்தே வந்திருக்கிறது.

சமஷ்டி நாட்டுப் பிரிவினைக்கான முதற்படியாக இருக்கக்கூடும் என்ற தவறான பயம் இருக்கிறது. சமஷ்டி அரசுகள் அவற்றில் இருந்த சமஷ்டி அலகுகளின் வழியில் பல நாடுகளாக சிதறுண்டதற்கு உதாரணமாக முன்னாள் சோவியத் யூனியனும் யூகோஸ்லாவியாவும் காட்டப்படுகிறது. இதேபோன்று நாடு பிளவடையாமல் பாதுகாப்பாக இருப்பதை ஒற்றையாட்சி முறையே உறுதிப்படுத்தும் என்பது சிங்களவர்களின் நிலைப்பாடாகும்.

ஆனால், இனங்களுக்கு இடையிலான உறவுகளை ஆக்கபூர்வ மான முறையில் கையாளாத காரணத்தால் ஒற்றையாட்சி அரசுகள் கூட பிளவ டைந்திருக்கின்றன. இதற்கு உதாரணமாக சூடானையும் (தென்சூடானாக பிளவடைந்தது) சேர்பியாவையும் (கொசோவோ) குறிப்பிடலாம். 2017 ஆம் ஆண்டில் இலங்கை உயர் நீதிமன்றம் வழங்கிய அறிவுத்தெளிவுடனான தீர்ப்பை அரசியல் கட்சிகளுக்கும் பொதுமக்களுக்கும் விளக்கிக்கூற வேண்டியது அவசியமானதாகும்.

(09 ஆம் பக்கம் பார்க்க...)



# கார்த்திகை தீப வரலாறும்

## திருவண்ணாமலை தரிசனத்தின் சிறப்புகளும்



- வி.ரி.சகாதேவராஜா

இந்துக்களின் கார்த்திகை தீபத் திருவிழா இன்று (7) புதன் கிழமை பௌர்ணமியன்று கொண்டாடப்படுகின்றது.

முருகப்பெருமானுக்குரிய இத் திருவிழா தொடர்பாக நாம் அறிந்திருக்க வேண்டும் என்பதற்காக இந்த கட்டுரை வரையப்படுகிறது.

**வரலாறு**

கைலாயத்தில் ஈசன் ஏகாந்த தவத்தில் ஆழ்ந்திருந்த போது உமை, ஈசனின் பின்புறமாய் வந்து நின்று விளையாட்டாய் அவர் இரு கண்களைப் பொத்தினாள். அதனால் உலகம் இருண்டது. ஈசனின் வல, இடக் கண்களான சந்திர, சூரியர்கள் களையிழந்தனர். நெற்றிக் கண்ணாகிய அக்னியும் அன்னையின் கைவிரல் பட்டுக் குளிர்ந்து போனது. அதனால் வேள்விகள் தடைப்பட்டன. யாகங்களும், பூஜைகளும் இல்லாமல் போயின. உலகத்தில் அருள் ஒழிந்தது. இருள் சூழ்ந்தது. உலகங்கள் இருண்டதால் முனிவர்களும், தேவர்களும் அஞ்சினர். மதி மயங்கினர். கடமைகளை மறந்து முடங்கினர். அதனால் உலகம் தன்நிலையிலிருந்து தவறியது. அடி அண்ணாமலையில் இருந்து. இதனால் சினம் கொண்டார் ஈசன். உமை விளையாட்டாய் இந்தச் செயலைச் செய்திருந்தாலும் அது மிகப் பெரிய தவறு என்பதால், அன்னையைச் சபித்தார். அன்னை அஞ்சி நடுங்கி பிழை பொறுக்குமாறு வேண்ட, “ தேவி, நீ விளையாட்டாகச் செய்தாலும் தவறு, தவறுதான். ஆதலால் நீ பூவுலகம் சென்று தவம் மேற்கொள்வாயாக! தக்க காலத்தில் யாம் வந்து உம்மை ஆட்கொள்வோம்’ என்று கட்டளையிட்டார். அன்னையும் அவ்வாறே ஈசனின் கட்டளைப்படி பூவுலகிற்கு வந்து தவம் செய்ய ஆரம்பித்தாள். அவ்வாறு அன்னை தவம் செய்து ஈசனின் அருள் பெற்று, சாப நிவர்த்தியான தலம் தான் அண்ணாமலை. சாப நிவர்த்தி மட்டுமல்ல ஈசனின் உடலில் சரி சமமாக இடப்பாகம் பெற்றாள். அன்னை கார்த்திகை மாதத்தில் கார்த்திகை விரதம் இருந்து, கார்த்திகை நட்சத்திரத்தில் ஈசனின் இடப்பாகம் பெற்ற அந்த நன்னாள் தான் கார்த்திகை தீபப் பெருநாளாகக் கொண்டாடப்படுகிறது

**திருவண்ணாமலை சிறப்புகள்**

1. திருவண்ணாமலையில் ஏற்றப்படும் கார்த்திகை தீபத்தை நேரில் பார்ப்பவர்களின் 21 தலைமுறைக்கு முக்தி கிடைக்கும்.

2. திருவண்ணாமலை தீபத்தன்று மலையை பார்த்து “நமசிவாய” சொன்னால், அந்த மந்திரத்தை 3 கோடி தடவை உச்சரித்த புண்ணியம் கிடைக்கும்.

3. திருவண்ணாமலை உச்சியில் தீபம் ஏற்றப்படும் போது மலைக்கு உள் பகுதியிலும் பூஜைகள் நடக்கும் ஒலி கேட்டதாக ரமணர், சேஷாத்திரி சுவாமிகள் உள்பட பல அருளாளர்கள் கூறியுள்ளனர்.

4. திருவண்ணாமலையில் கார்த்திகை தீபம் ஏற்றப்பட்ட பிறகு அதைப் பார்த்து வணங்கியபடி கிரிவலம் வந்தால், அந்த ஜோதியின் கதிர்கள் நம் உடம்பில் பட்டு ஆன்ம சக்தி அதிகரிக்கும் என்பது ஐதீகம்.

5. தீபத் திருநாளில் 5 தடவை (மொத்தம் 70 கி.மீ. தூரம்) கிரிவலம் வந்தால், அவர்கள் எவ்வளவு பெரிய பாவம் செய்திருந்தாலும், அவற்றில் இருந்து முழுமையான விமோசனம் கிடைக்கும் என்று புராணங்களில் கூறப்பட்டுள்ளது.

6. மலை மீது தீபம் ஏற்றப்படும் போது, “தீப மங்கள ஜோதி நமோ, நம” என்ற பாடலை பாடி வழிபட்டால் வாழ்வில் மங்களம் பெருகும்.

7. கார்த்திகைத் தீபத்துக்கு மூன்றாவது நாள் மலையை பஞ்ச மூர்த்திகளும் வலம் வருவது மிகச்சிறப்பாக நடைபெறும்.

8. திருவண்ணாமலை கார்த்திகை தீபத்தை காண சித்தர்கள் வருவார்கள் என்பது நம்பிக்கை. அப்படி வரும் சித்தர்கள் மலை உச்சியில் தீபம் ஏற்றும் கொப்பரை நெய்யில் சக்தி வாய்ந்த மூலிகைத் தைலங்களை சேர்த்து விடுவதாகச் சொல்கிறார்கள். இதனால் தீபத்தில் இருந்து வெளிப்படும் புகை தீய சக்திகளை அழிப்பதாக கருதப்படுகிறது.

9. திருவண்ணாமலை மலை சுமார் 2,668 அடி உயரம் கொண்டது. கீழ் இருந்து மலை உச்சி வரை செல்ல சுமார் 8 கி.மீ. பாதை உள்ளது. மலை ஏற சுமார் 4 மணி நேரமாகும்.

10. திருவண்ணாமலை கார்த்திகை தீபத்துக்கு, சர்வாலய தீபம், கார்த்திகை விளக்கீடு, ஞானதீபம், சிவஜோதி, பரஞ்சுடர் என்றும் பெயர்கள் உண்டு.

11. கார்த்திகை தீபத்தன்று கிரிவலம் செல்பவர்களுக்கு ஆயிரம் அசுவமேத யாகம் செய்த பலன் கிடைக்கும்.

12. கார்த்திகை தீபம் தினத்தன்று சிவலிங்கம் முன்பு நெய்தீபம் ஏற்றி வழிபாடு செய்தால், அவர்களது வாழ்க்கை பிரகாசமாக இருக்கும் என்பது நம்பிக்கை.

13. கார்த்திகை தீபம் ஏற்றப்படும் காட்சியை நேரில் பார்த்து வழிபடுபவர்களுக்கு சகல தானம் கொடுப்பதால் கிடைக்கும் புண்ணியங்கள் கிடைக்கும்.

14. கார்த்திகை மாதம், கார்த்திகை நட்சத்திரத்தில் திருவண்ணாமலை தலத்தில் ஏதாவது ஒரு இடத்தில் தீபம் ஏற்றி வழிபட்டால் குழந்தை பாக்கியம் கிடைக்கும்.

15. திருவண்ணாமலை மலை உச்சியில் தீபம் ஏற்ற பயன்படுத்தும் கொப்பரை சுமார் 2 ஆயிரம் லிட்டர் நெய் பிடிக்கும் அளவு கொண்டது.

16. மலை உச்சியில் ஏற்றப்படும் தீபத்தின் ஒளி சுமார் 20 கிலோ மீட்டர் தொலைவுக்கு தெரியும்.

17. இந்த தீபம் சுமார் 11 நாட்கள் தொடர்ந்து எரியும் என்பது குறிப்பிடத்தக்கது.

18. திருவண்ணாமலையில் கார்த்திகை தீப திருவிழாவை முன்னிட்டு, பரணி தீபம், அண்ணாமலையார் தீபம், விஷ்ணு தீபம், நாட்டுக் கார்த்திகை தீபம், தோட்டக் கார்த்திகை தீபம் என 5 வகையான தீபங்கள் ஏற்றப்படும்.

19. சிவபெருமான் கார்த்திகை தீப நாளில் அக்னியில் நடனம் ஆடுவதாக ஐதீகம். இந்த நடனத்துக்கு முக்தி நடனம் என்று பெயர்.

20. கார்த்திகை தீபம் தினத்தன்று ஆலயங்களில் சொக்கப்பனை கொளுத்துவார்கள். ஆனால் திருவண்ணாமலையில் சொக்கப்பனை கொளுத்தும் பழக்கம் இல்லை.

21. தீப நாளில் மலை மேல் தீபம் காண முடியாதவர்கள், தீப தரிசன நேரத்தில் அதை நினைத்தாலே, அதற்குரிய பலன்கள் கிடைக்கும் என்பது பெரியோர் வாக்கு.

22. திருவண்ணாமலை கார்த்திகை தீபத்துக்கு நிகராக இதுவரை வந்த ஆலயத்திலும் ஜோதி வழிபாடு ஏற்பட்டதில்லை.

23. திருவண்ணாமலையில் ஏற்றப்படும் கார்த்திகை தீபம், அண்டசராசரங்களுக்கும் தீப விளக்காக கருதப்படுகிறது.

24. திருவண்ணாமலையில் ஏற்றப்படும் தீபம், உலகத்தை எல்லாம் இயக்குகின்ற பரம்பொருள் ஒன்றே என்பதை “இறைவன் ஒருவனே” என்ற தத்துவத்தை உணர்த்துகிறது.

25. கார்த்திகை தீபத்தன்று அதிகாலை திருவண்ணாமலை கோவிலில் பரணி நட்சத்திர நேரத்தில் ஏற்றப்படும் பரணி தீபத்தை அங்குள்ள சொர்ண பைரவர் சன்னதியில் வைத்து விடுவார்கள். பிறகு மாலையில் அதைத்தான் மலை உச்சிக்கு எடுத்துச் சென்று தீபத்தை ஏற்றுவார்கள்.



26. திருவண்ணாமலை தீபத்தை காண கடந்த ஆண்டு சுமார் 20 லட்சம் பக்தர்கள் திரண்டனர்.

27. திருவண்ணாமலை மலை உச்சியில் தீபம் ஏற்றப்பட்டதும் வணங்கினால் பாவம் நீங்கி பிறவிப் பிணியை அறுக்க வல்லது என்பது ஐதீகமாகும்.

28. திருவண்ணாமலையில் தீபம் ஏற்றப்பட்டதும், “அண்ணாமலையாருக்கு அரோகரா” என்று பக்தர்கள் முழக்கமிடுவார்கள். இதற்கு என்ன அர்த்தம் தெரியுமா? “இந்த உடம்பு நான் என்னும் எண்ணத்தை அழித்து, மனதை ஆன்மாவில் அழித்து, உள்முகத்தால் அத்வைத ஆன்ம ஜோதியைக் காண்பது தான் இந்த தீப தரிசனம் ஆகும்”- இதை சொன்னவர் ரமண மகரிஷி.

29. பஞ்சபூத தலங்களுக்குள் இது நெருப்புக்குரிய தலம். இங்கு மலையே இறைவனின் சொரூபமாக உள்ளது.



# இனநெருக்கடி தீர்வுக்கு...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)


பல்வேறு இனங்கள், மதங்களைக்கொண்ட பெரிய நாடு ஐக்கியப்பட்டதாக இருப்பது மாத்திர மல்ல பொருளாதார வல்லமையிலும் சர்வதேச மதிப்பிலும் மேலும் மேலும் பலமடைந்து கொண்டிருப்பதற்கு இலங்கையின் அயல் நாடான இந்தியா சிறந்த உதாரணமாகும். இந்திய அரசாங்க வடிவம் முற்றுமுழுதாக சமஷ்டியும் அல்ல, முற்றுமுழுதாக ஒற்றையாட்சியும் அல்ல. நிலைவரங்கள் வேண்டிநிற்பதற்கேற்ப இந்த இரு வடிவங்களில் ஏதாவது ஒன்றை அது எடுக்கலாம். சமாதான காலத்தில் சமஷ்டியாகவும் நெருக்கடி காலத்தில் ஒற்றையாட்சியாகவும் அது மாறலாம்.

இதுவே 1987 சமாதான உடன்படிக்கையில் இந்தியாவும் இலங்கையும் இணங்கிக்கொண்ட தீர்வாகும். ஆனால் அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தில் அது திரிபுபடுத்தப்பட்டுவிட்டது.

13 பிளஸ் அடிப்படையில் தீர்வுகுறித்த பேச்சுவார்த்தையை தான் ஆதரிப்பதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அண்மையில் பாராளு மன்றத்தில் கூறினார். தற்போதைய பொருளாதார நெருக்கடி காலத்தில் இலங்கையின் சிறந்த ஆபத்பாந்தவனாக இந்தியா இருந்துவருகிறது. ஏனைய நாடுகளை விடவும் இந்தியா இலங்கைக்கு கூடுதல் உதவிகளை வழங்குகிறது. இந்தியாவின் சொந்த அனுபவத்தின் அடிப்படையில் அதன் அரசியல் ஆதரவுடன் இலங்கை நடைமுறைச்சாத்தியமான தீர்வொன்றைக் காணமுடியும் உண்மையில் ஐக்கியப்பட்ட ஒரு நாடாக பொருளாதார அபிவிருத்தியை நோக்கி நடைபோடமுடியும்.

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

**18)** 

i) இத் திண்ம உருவில் எத்தனை முகங்கள் உள்ளன? ................................

ii) இத் திண்ம உருவில் எத்தனை உச்சிகள் உள்ளன? ................................

**19)**  நிறந் தீட்டப்பட்ட பகுதியைப் பின்னமாக எழுதுக.

..........................................

**20)** தரப்பட்ட எண் கோலங்களில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

i) 122, 124, 126, ............., ...........    ii) 18, 15, 12, ............., ...........

**21)** 

| | | |
|---|---|---|
| 3, | 9, | |
| | 6, | 14, |
| 10, | | 12, |

பெட்டிக்குள் உள்ள எண்களில் மூன்றின் மடங்குகளைத் தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக.

..............................................................

**22)** ஒரு பழக்கூடையில் 620 அப்பிள் பழங்களும் 125 மாம்பழங்களும் உண்டு. கூடையில் உள்ள மொத்தப் பழங்களின் எண்ணிக்கையை எழுதுக.

.................................................................................

**23)** ஒரு கிளையில் 480 பூக்கள் மலர்ந்திருந்தன. அவற்றில் 25 பூக்களைப் பறித்தெடுத்தால் கிளையில் எஞ்சியிருக்கும் பூக்களின் எண்ணிக்கை யாது?

..............................................................

**24)** பழப்பாகுப் போத்தல் ஒன்றில் 3*l* 300*ml* பானம் அடங்கியுள்ளது. அதனை 3 மாணவர்களிடையே சமமாகப் பகிரப்பட்டதெனின் ஒருவருக்குக் கிடைத்த பான அளவு யாது?

..............................................................

**25)** 500g சீனியின் விலை ரூபா 48.00 எனின் 1500g சீனியின் விலை யாது? ..................................................

**26)** **பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.**

| பொருள் | வாங்கிய அளவு | ஒரு கிலோகிராமின் விலை | | பெறுமதி | |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | ரூபா | சதம் |
| பருப்பு | 2kg | 95 | 00 i) | ............ | ........ |
| தேயிலை | 500g | 200 | 00 ii) | ............ | ........ |
| | | மொத்தப்பணம் | | ............ | ........ |

**27)** கடிகார முகத்தில் பி.ப. 3.30 மணி காட்டுகின்றது. கடிகாரம் காட்டும் நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

....................................................

**28)** 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?

**28)** 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?



....................................................

**29)** ஒரு பூங்கொத்தில் மூன்று பூக்கள் வீதம் 12 பூங்கொத்துக்களில் எத்தனை பூக்கள் உள்ளன?

....................................................    (30 புள்ளிகள்)

❖ **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தெ செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

**30)** சூரிய நமஸ்காரத்தின் நான்காம் படிநிலை எது?

1)     2)     3) 

**31)** வடமாகாணத்தில் அமைந்துள்ள குளம்
1) அபயவாவி    2) இரணைமடுக்குளம்    3) பராக்கிரமபாகு சமுத்திரம்

**32)** உள் மூச்சு வாங்குதல் வெளி மூச்சு விடுதல் என்பது மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்ட எந்த படிமுறை ஆகும்?
1) திடசித்தம்    2) உதிப்பு    3) உடலைத் தளர்த்தல்

**33)** தேசிய இலச்சினையின் பூவிதழ் வட்டத்தின் மத்தியில் இருப்பது எது?
1) சூரியன்    2) வாளேந்திய சிங்கம்    3) நெற்கதிர்

**34)** பிரித்தானியர்களால் முழுமையாக இலங்கை கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?
1) 1976    2) 1851    3) 1815

**35)** வருடத்தின் முதல் மாதமும் இறுதி மாதமும் பூக்கும் பூக்கள் எவை?
1) இறப்பர், வேம்பு    2) இறப்பர், தாழம்பூ    3) பிறைப்பூ, நாவல்

## விடைகள்

**18.** 1) 6  2) 8
**19.** $\frac{3}{10}$
**20.** 1) 128, 130  2) 9, 6
**21.** 3, 6, 9, 12
**22.** 745
**23.** 455
**24.** 11100ml / 1100ml
**25.** ரூபாய் 144.00
**26.** 1) 190  2) 100  3) 290
**27.** 15 : 30
**28.** 5m 50cm / 550cm
**29.** 36 பூக்கள்
**30.** 1  **31.** 2  **32.** 3
**33.** 2  **34.** 3  **35.** 2

## கல்வி tv CHANNEL-1

**07.12.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

## கல்வி tv CHANNEL - 2

**07.12.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# வீடு தேடிவந்த வித்தகர் விருது



நிந்தவூர், டிசெ. 07

நிந்தவூரைச் சேரந்த ஓய்வு நிலை அதிபர் "சாதனைச் சிகரம்" ஹாஜியானி மைமூனா செய்னுலாப்தீன், கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் இலக்கிய வித்தகர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழாவை யொட்டி இலக்கியத்துறைக்கு ஹாஜியானி மைமூனா செய்னுலாப்தீன் ஆற்றிய சேவையைப் பாராட்டி இந்த இலக்கிய வித்தகர் விருது வழங்கப்பட்டுள்ளது.

அண்மையில் திருமலையில் நடைபெற்ற கிழக்கு பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாண தமிழ் இலக்கிய விழாவில் குறித்த தெரிவு செய்யப்பட்டோருக்கு வித்தகர் விருதுகள் வழங்கப்பட்ட போதிலும், நடமாட முடியாத சுகயீனம் காரணமாக ஹாஜியானி செய்னுலாப்தீன் அங்கு சென்று விருது பெறமுடியாத நிலையிலிருந்தார்.

எனினும் பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சரண்யா சுதர்சனின் ஆலோசனைக்கு அமைவாக நிந்தவூர் பிரதேச செயலக கலாசாரப் பிரிவினர் இலக்கிய ஆளுமை திருமதி. மைமூனா செயினுலாப்தீனின் வீடு சென்று குறித்த விருதை நேரில் வழங்கி கௌரவித்தனர். (அ-06)

# பல கோடி ரூபா பெறுமதி கொண்ட வலம்புரிச் சங்குடன் ஒருவர் கைது!

## அதிரடிப்படையினர் நடவடிக்கை





அம்பாறை, டிசெ. 07

வலம்புரிச் சங்கு ஒன்றைத் தம் வசம் வைத்திருந்த சந்தேக நபரை கல்முனை விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை விசேட அதிரடிப் படை முகாமுக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவல் ஒன்றை அடுத்து கடந்த திங்கட்கிழமை இரவு மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆரையம்பதி 3ஆம் பிரிவில் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட தேடுதலில் சந்தேக நபர் கைதானார்.

இவ்வாறு கைதான நபர் ஆரையம்பதியை பகுதியை சேர்ந்தவர். சந்தேக நபர் வசம் இருந்து பல கோடி ரூபா பெறுதியான வலம்புரிச் சங்கு ஒன்று கைப்பற்றப்பட்டது.

பின்னர் கைது செய்யப்பட்ட நபர் உள்ளிட்ட சான்று பொருட்கள் யாவும் காத்தான்குடி பொலிஸாரிடம் நீதி மன்ற நடவடிக்கைக்காக பாரப் படுத்தப்பட்டன. (அ)

# கல்முனை மாநகர சபையின் பாதீடு எதிர்வரும் 14 ஆம் திகதி

நிந்தவூர், டிசெ. 07

கல்முனை மாநகர சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான பாதீடு விரைவில் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றது.

சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆளுகையிலுள்ள கல்முனை மாநகர சபையில், இலங்கை தமிழரசுக்கட்சி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தமிழர் விடுதலைக்கூட்டணி மற்றும் தோடம்பழ சுயேச்சைக்குழு உட்பட பலகட்சி உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

இந்நிலையில் எதிர்வரும் 14 ஆம் திகதி குறித்த 2023 பாதீட்டை சமர்ப்பித்து அங்கீகரிப்பதற்கான விசேட சபை அமர்வு மேயர் சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் நடைபெறவிருக்கின்றது. இந்த விசேட அமர்வில் மேயர் சிரேஷ்ட சட்டத்தரணி றகீப் 2023 ஆம் வருடத்திற்கான பாதீட்டை சபையினரின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிப்பார்.

இலங்கையில் நீடிக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் முடிவடைந்து எதிர்வரும் மார்ச் மாதமளவில் உள்ளூராட்சி மன்ங்களுக்கான தேர்தல் நடைபெறலானமென எதிர்பார்க்கப்படும் நிலையல்,

முக்கிய சபையான கல்முனை மாநகர சபையின் இந்த பாதீடு பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேறுமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஏற்கனவே கிழக்கில் பல உள்ளூராட்சி மன் றங்களின் 2023 ஆம் ஆண்டுக்கான பாதீடுகள் நிறைவேற்றப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (அ-06)

# நாவலர் ஆண்டின் திட்டம் காரைதீவில் முன்னெடுப்பு



அம்பாறை, டிசெ. 07

இலங்கை அரசினால் பிரகடனப்படுத்தப்பட்ட நல்லை நகர் ஆறுமுக நாவலர் பெருமான் ஆண்டின் செயற்திட்டங்கள் இலங்கையில் முதன்முதலாக விபுலானந்த அடிகள் பிறந்த காரைதீவில் முன்னெடுக்கப்பட்டது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அடுத்த ஆண்டை நாவலர் ஆண்டாக ஜனாதிபதி முன்னிலையில் பிரகடனப்படுத்தி இருந்தது .

அந்த நாவலர் ஆண்டின் 17 செயற்றிட்டங்களில் ஒன்றான வீதி ஒன்றிற்கு "நாவலர் வீதி" என பெயர் சூட்ட காரைதீவு பிரதேச சபை நேற்று முன்தினம் சபை அமர்வில் தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றது.

இலங்கையில் முதன்முதலாக வடக்கில் நல்லூரில் பிறந்த நாவலர் பெருமானுக்கு கிழக்கில் காரைதீவில் பிறந்த விபுலானந்த அடிகளாரின் கோட்டையில் முதல் கௌரவம் வழங்கப்பட்டிருக்கிறது.

அந்த நிகழ்வு காரைதீவு பிரதேச சபையில் நேற்று முன்தினம் சம்பிரதாய பூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. அங்கு நாவலர் ஆண்டை முன்னெடுக்க பிரகடனம் செய்யப்பட்டது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட உத்தியோகத்தர் கு.ஜெயராஜியின் ஏற்பாட்டில் இடம் பெற்ற இந்த பிரகடன நிகழ்வில், உத்தியோகபூர்வமாக நாவலர் பெருமானின் திருவுருவப்படம் தவிசாளரிடம் கையளிக்கப்பட்டது.

மேலும், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் வெளியிட்ட நாவலர் பெருமானின் நூல்கள் நூல்கள் அங்கு தவிசாளர், சபை உறுப்பினர்கள், அதிபர், ஆசிரியர், மாணவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன. (அ)

# கிழக்கு கல்விப் பணிப்பாளரின் மணி விழா நாளை பட்டிருப்பில்

நிந்தவூர், டிசெ. 07

கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றும் திருமதி. நகுலேஸ்வரி புள்ளநாயகத்தின் கல்விப் பணியைப் பாராட்டும் நிகழ்வும் "நகுலம்" மணிவிழா சிறப்பு மலர் வெளியீடும் நாளை வியாழக்கிழமை காலை 09.00 மணிக்கு பட்டிருப்பு தேசியப் பாடசாலையின் ஒன்றுகூடல் மண்டபத்தில் அதிபர் ரி.சபேசன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் கலாநிதி. மூ. கோபாலரெத்தினம் பிரதம அதிதியாகவும் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர்.ஜி.சுகுணன் கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளரும் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளருமான பொறியியலாளர் என். சிவலிங்கம் கிழக்கு மாகாணத்திலுள்ள வலயக் கல்விப் பணிப்பாளர்கள் பட்டிருப்பு கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) அஎஸ். மகேந்திரகுமார் ஓய்வுநிலை கோட்டக் கல்விப் பணிப்பாளர் சைவப் புலவர் கலாநிதி. சா. தில்லைநாதன் ஆகியோர் கௌரவ அதிதிகளாக கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தின் கல்வி வரலாற்றில் முதலாவது பெண் மாகாணக் கல்விப் பணிப்பாளர் என்ற பெருமையை தனதாக்கிய இவர் துறைநீலாவணை கிராமத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-06)

# அப்துல் ஹமீதுக்கு நிந்தவூரில் வரவேற்பு

நிந்தவூர், டிசெ. 07

தமிழ் கூறும் நல்லுலகெங்கும் புகழ்பெற்ற உலக அறிவிப்பாளர் பீ.எச்.அப்துல் ஹமீதுக்கு கிழக்கிலங்கையின் நிந்தவூரில் பெருவரவேற்பும் கௌரவமும் அளிக்கப்பட்டது.

நிந்தவூர் அல்-அஷ்ரக் தேசியப்பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் ஏற்பாடு செய்திருந்த இளைய தலைமுறையினருக்கான வழிகாட்டல் மாநாட்டில் பிரதம அதிதியாகவும், விசேட பேச்சாளராகவும் அவர் கலந்து கொண்டார்.

இந்த மாநாட்டு நிகழ்வுக்கு வருகை தந்த உலக அறிவிப்பாளர் அப்துல் ஹமீதுக்கு பாடசாலை வளாகத்தில் பெருவரவேற் பளிக்கப்பட்டதுடன்,

மாநாட்டு நிகழ்வில் பாடசாலை சமூகத்தினால் பொன்னாடை போர்த்தியும், விருது வழங்கியும் பெரும் கௌரவம் அளிக்கப்பட்டது.

இந்த மாநாட்டில் கௌரவ அதிதியாகக் கலந்து கொண்ட அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ.ஜெகதீஸன், கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹதுல் நஜீம் பாடசாலை அதிபர் ஏ.அப்துல் கபூர், ஒழுங்கமைப்பாளர் எஸ்.எச்.எம்.செய்யித் றஸ்மி மௌலானா மற்றும் பழைய மாணவர் சங்க, பாடசாலை அபிவிருத்தி சங்க முக்கியஸ்தர்களின் பங்கு பற்றுதலுடன் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது. (அ-06)

# கூட்டுறவு பணியாளர் கௌரவிப்பு நிகழ்வு

அம்பாறை, டிசெ. 07

மண்முனை தென்மேற்கு பல்நோக்கு கூட்டுறவு சங்கம் கூட்டுறவு பணியாளர்களுக்கான கௌரவிப்பு விழாவை நேற்று முன்தினம் நடத்தியது.

சங்கத் தலைவர் ஏ. கருணாகரன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொறியியலாளர். என் சிவலிங்கம் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார். மட்டக்களப்பு மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே .வி.தங்கவேல் சிறப்பு அதிதியாக கலந்து கொண்டார்.

அங்கு முனைக்காடு நாகசக்தி கலா மன்றத்தின் பாரம்பரிய நாட்டுக்கூத்து நிகழ்வு விசேஷமாக இடம்பெற்றது.

அங்கு சாதனை படைத்த கூட்டுறவுப் பணியாளர்கள் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்கள். அவர்களுக்கு சீருடையும் வழங்கப்பட்டது. கூட்டுறவுச் சங்க முன்னாள் தலைவரும் அதிபருமான சிவ.அகிலேஸ்வரனும் உரையாற்றினார். கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளர் க. சுதாகரன் நன்றியுரையாற்றினார்.

கூடவே வருட இறுதி நிகழ்வுகளும் நடைபெற்றன. (அ)





## கொலம்பியாவில் பெரும் நிலச்சரிவு

### 27 பேர் உயிரிழப்பு

பொகோட்டா, டிசெ. 07

தென் அமெரிக்கா நாடான கொலாம்பியாவில் உள்ள பியூட்லோ ரிகோ பகுதியில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் கனமழை காரணமாக அப்பகுதியில் உள்ள நதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

இதனால், நதிகளின் ஓரம் உள்ள பொதுமக்கள் வசிப்பிடங்களில் நேற்றுமுன்தினம் கடும் நிலச்சரிவு ஏற்பட்டது. இந்த நிலச்சரிவில் சிக்கி சுமார் 27 பேர் உயிரிழந்துள்ளதாக தகவல்கள் வெளியானது.

மேலும், பலர் மண் சரிவில் சிக்கி புதையுண்டு போனதாகவும், அவர்களை மீட்கும் பணியில் ராணுவத்தினர் ஈடுபட்டுள்ளதாகவும் அந்நாட்டு அரசு தெரிவித்தது.

இது தொடர்பாக அந்நாட்டு அதிபர் கூறுகையில், நிலச்சரிவில் சிக்கி 3 சிறுவர்கள் உள்பட 27 பேர் பலியாகி உள்ளனர் என தெரிவித்தார். தொடர்ந்து அங்கு மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. (அ)

# ரஷ்யாவின் விமான நிலையத்தை தாக்கியது உக்ரைனின் ட்ரோன்!

### எண்ணெய் சேமிப்பு தொட்டி தீப்பிடித்தது



மொஸ்கோ, டிசெ. 07

உக்ரைன் எல்லையில் உள்ள ரஷ்யாவின் குர்ஸ்க் பிராந்தியத்தில் உள்ள விமானநிலையத்தை ட்ரோன் ஒன்று தாக்கியுள்ளது.

நேற்று முன் தினம் இரண்டு ரஷ்ய விமான நிலையங்களை ட்ரோன்கள் தாக்க முயற்சித்ததாகவும், அவற்றைச் சுட்டு வீழ்த்தியதாகவும் ரஷ்யா குறிப்பிட்டது. இந்த தாக்குதல்கள் உக்ரைனின் பயங்கரவாதத் தாக்குதல்கள் என குற்றம்சாட்டியது.

இந்த நிலையில், நேற்று மீண்டும் ரஷ்ய விமான நிலையமொன்றை ட்ரோன் தாக்கியுள்ளது.

"குர்ஸ்க் விமான நிலையத்தின் பகுதியில் ட்ரோன் தாக்குதலின் விளைவாக, ஒரு எண்ணெய் சேமிப்பு தொட்டி தீப்பிடித்தது. உயிர் சேதம் ஏதும் ஏற்படவில்லை," என்று சமூக ஊடகங்களில் ஆளுநர் ரோமன் ஸ்டாரோவாய்ட் கூறினார். தீயைக் கட்டுப்படுத்த முயற்சித்து வருவதாகவும் கூறினார்.

ட்ரோன் எங்கிருந்து வந்தது என்பதை ஸ்டாரோவாய்ட் குறிப்பிடவில்லை.

திங்களன்று, ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சகம், ரியாசான் பிராந்தியத்தில் உள்ள விமான நிலையம் மற்றும் சரடோவ் பிராந்தியத்தில் உள்ள ஏங்கெல்ஸ் விமான நிலையத்தை "சோவியத் தயாரித்த ட்ரோன்கள்" மூலம் "தாக்குவதற்கு" உக்ரைன் முயற்சித்தது என தெரிவித்தது.

ட்ரோன்கள் இடைமறிக்கப்பட்டன, ஆனால் ட்ரோன் சிதறல்கள் விழுந்து சிறிய சேதத்தை உருவாக்கின என தெரிவித்தது.

இதில், 3 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டதாகவும், மேலும் 4 பேர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பாடசாலை சிறுமிகள் மீது ஜேர்மனியில் கத்திக்குத்து!

### ஒருவர் உயிரிழப்பு!!




பேர்லின், டிசெ. 07

தெற்கு ஜேர்மனியில் பாடசாலைக்கு நடந்து சென்று கொண்டிருந்த இரு சிறுமிகள் மீது கத்திக்குத்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை இல்லர்கிர்ச்பெர்க் நகரத்திலுள்ள அகதிகள் தங்குமிடத்திலிருந்து வெளியே வந்து இளைஞர் ஒருவர் இந்த தாக்குதலை நடத்தியதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த தாக்குதலின்போது 14 வயது சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 13 வயதுடைய மற்றுமொரு சிறுமி படுகாயமடைந்துள்ளார்.

13 வயது சிறுமி உயிருக்கு ஆபத்தான காயங்களில் இருந்து மீண்டு வருவதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

எரித்திரியாவைச் சேர்ந்த புகலிடம் கோரி வந்த 27 வயது இளைஞரை ஜேர்மன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அதிகாரிகள் அருகிலுள்ள கட்டடத்தை சோதனையிட்டபோது, தாக்குதலுக்கு பயன்படுத் தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் கத்தியுடன் அவர் இருப்பதைக் கண்ட பொலிஸார் அவரை கைது செய்தனர். மேலும் இருவர் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர் மருத்துவமனையில் பொலிஸ் பாதுகாப்பில் உள்ளார். அங்கு அவர் குறிப்பிடப்படாத காயத்துடன் சிகிச்சை பெற்று வருகிறார்.

வெளிநாட்டினர் அல்லது புகலிடக் கோரிக் கையாளர்கள் மீது சந்தேகத்தை ஏற்படுத்தும் வகையில் இந்தச் சம்பவத்தைப் பயன்படுத்தவேண் டாம் என்று பொலிஸ்துறை ஒரு அறிக்கையில் பொதுமக்களை கேட்டுள்ளது.

நகரத்தில் உள்ள அனைவரும் அதிர்ச்சியில் இருப்பதாக மேயர் மார்கஸ் ஹவுஸ்லர் கூறினார்.

ஜேர்மனியின் உள்துறை அமைச்சர் நான்சி பேசர் வெளியிட்டுள்ள ருவிட்டர் பதிவில், 'பயங்கரமான இந்த செய்தி என்னை உலுக்கியது. கொல்லப்பட்ட சிறுமிக்கு இரங்கல் தெரிவிக்கிறேன், காயமடைந்த சிறுமி குணமடைவாள் என்று மனப்பூர்வமாக நம்புகிறேன். அனைத்து பின்னணிகளையும் பொலிஸார் தீவிரமாக விசாரித்து வருகின்றனர்' என பதிவிட்டுள்ளார்.

கடந்த 2015ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, இல்லர்கிர்ச்பெர்க் நகரம், 5,000க்கும் குறைவான மக்கள்தொகை கொண்ட ஒரு சிறிய நகரம் ஆகும். (அ)



# 3 லட்சம் கோழிகளை அழிக்கிறது ஜப்பான்!

### பறவைக் காய்ச்சல் பதற்றம்

ரோக்கியோ, டிசெ. 07

ஜப்பானின் ஆய்ச்சி மாகாணத்தில் உள்ள ஒரு கோழிப் பண்ணையில் வழக்கத்துக்கு மாறாக அதிக எண்ணிக்கையில் கோழிகள் இறந்துள்ளன. இதைத் தொடர்ந்து இறந்த கோழிகளை பரிசோதித்ததில் அவற்றில் பெரும்பாலானவை பறவைக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு இறந்தமை தெரியவந்தது.

இது அங்கு பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆய்ச்சி மாகாணத்தில் 11 ஆண்டுகளுக்கு பிறகு தற்போது பறவைக் காய்ச்சல் ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

பறவைக் காய்ச்சல் மேலும் பரவுவதை தடுக்கும் விதமாக மாகாணம் முழுவதிலும் சுமார் 3 இலட்சத்து 10 ஆயிரம் கோழிகளை அழிக்க அதிகாரிகள் முடிவு செய்து அதற்கான பணிகளை தொடங்கியுள்ளனர்.

இதேபோல் கோஹிமா மாகாணத்திலும் பறவைக் காய்ச்சல் காரணமாக 34 ஆயிரம் கோழிகள் அழிக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

ஜப்பானில் கடந்த ஒக்ரோபர் மாத இறுதியில் இருந்து பறவைக் காய்ச்சல் பரவி வருவதும் இதுவரை 33 இலட்சம் கோழிகள் அழிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# கடலில் விழுந்தது விமானம்; இரண்டு பெண்கள் மரணம்!

புளோரிடா, டிசெ. 07

அமெரிக்காவின் புளோரிடா மாகாணம் செயின்ட் பீற்றர்ஸ்பர்க் நகரில் உள்ள விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட தனியாருக்கு சொந்தமான சிறிய விமானம் ஒன்று கடலில் விழுந்துள்ளது.

புளோரிடாவின் வெனிஸ் நகரை நோக்கிச் சென்ற இந்த விமானத்தில் ஆண் விமானி ஒருவரும், 2 பெண் பயணிகளும் இருந்தனர். இந்த நிலையில் விமானம் வெனிஸ் நகரை நெருங்கியபோது திடீரென மாயமானது. இதையடுத்து விமானத்தைத் தேடும் பணிகள்முடுக்கிவிடப்பட்டன.

இதற்கிடையில் வெனிஸ் நகருக்கு அருகே கடலில் சென்று கொண்டிருந்த படகோட்டிகள் சிலர் கடலில் ஒரு பெண்ணின் சடலம் மிதப்பதைக் கண்டனர். இது குறித்து அவர்கள் அளித்த தகவலின் பேரில் நீச்சல் வீரர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று பெண்ணின் சடலத்தை மீட்டனர்.

பின்னர் அந்த பகுதியில் நடத்தப்பட்ட தேடுதல் வேட்டையில் மாயமான விமானத்தின் சிதைவுகள் கடலில் கண்டெடுக்கப்பட்டன. அந்த இடத்தில் இருந்து மேலும் ஒரு பெண் சடலமாக மீட்கப்பட்டார்.

இதை தொடர்ந்து, மாயமான அந்த விமானம் கடலில் விழுந்து நொருங்கியதும், இதில் பெண் பயணிகள் இருவரும் பலியானதும் தெரியவந்தது.

இந்த விபத்தில் விமானி மாயமாகியுள்ளார். அவரின் கதி என்ன? என்பது தெரியவில்லை. அவரை தேடும் பணிகள் தொடர்ந்து நடந்து வருகின்றன. (அ)



# கொழும்பு துறைமுகத்தை ஜா-எல வரை நீடிக்க திட்டம்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 07

கொழும்பு துறைமுகத்தை ஜா-எல வரை நீடிக்கத் திட்டமிட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையின் முதன்மையானதும் மிகவும் எதிர்பார்ப்புடையதுமான வருடாந்த பொருளாதார நிகழ்வான, 2022 ஆம் ஆண்டுக்கான இலங்கை பொருளாதார மாநாடு நேற்று முன்தினம் கொழும்பு ஷங்ரில்லா ஹோட்டலில் நடைபெற்றது.

'கொந்தளிப்பில் இருந்து வாய்ப்புக்கு மீள்வது' என்ற தொனிப்பொருளின் இந்த மாநாடு நடைபெற்றது. இந்நிகழ்வை அங்குரார்ப்பணம் செய்து வைத்த பின் உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2050 ஆம் ஆண்டை எதிர்கொள்ளும் வகையில் வலுவான புதிய பொருளாதார முறைமையை அறிமுகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

இது நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் பொருளாதார மறுசீரமைப்புக்கு மேலதிகமான பணி என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பழமையான பொருளாதார முறைமையை கையாள்வதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க முடியாதெனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, இலங்கையின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முதலாவதாகவும் இரண்டாவதாகவும் மூன்றாவதாகவும் தேவைப்படுவது வெளிநாட்டு அந்நியச் செலாவணியே என்றும் ஆணித்தரமாக தெரிவித்தார்.

மேலும், இலங்கை தற்போது எதிர்நோக்கி வரும் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீளவேண்டுமாயின், கடன் மீளச் செலுத்துவதை மறுசீரமைக்கவேண்டும் என்பதுடன், மிகத் திருத்தமான பொருளாதார முறைமையொன்று அறிமுகம் செய்யப்பட வேண்டுமென்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இந்நிலைமையிலிருந்து மீள்வதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை பெற்றுக்கொள்ள முடியும் என நம்பிக்கை தெரிவித்த ஜனாதிபதி,



இதற்காக அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் ஊழியர் மட்ட ஒப்பந்தமொன்றை கைச்சாத்திட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

அடுத்த வருடம் மின் சக்தித் துறைக்கு மாத்திரம் 300 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கிடப்படவுள்ளதாகவும் இதனால் இச்செலவை மீளப் பெற்றுக்கொள்வதற்கான மாற்றுவழிகளைத் தேடவேண்டுமென்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

வலுச்சக்தி துறையில் புதிய மாற்று சக்திகளை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அதற்கு அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் தெரிவித்த ஜனாதிபதி, புதுப்பிக்கத்தக்க சக்திக்கு பதிலாக பசுமை ஹைட்ரஜன் சக்தியில் கவனம் செலுத்த அரசாங்கம் தீர்மானித்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

உலக வங்கியின் தெற்காசிய பிராந்திய துணைத் தலைவர் மார்ட்டின் ரைசர், இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் விஷ் கோவிந்தசாமி, இந்திய என்.ஐ.டி.ஐ யின் பிரதம நிறைவேற்று அதிகாரி பரமேஸ்வரன் ஐயர் ஆகியோரும் இந்நிகழ்வில் உரையாற்றினர்.

பாராளுமன்ற உறுப்பினர்களான எரான் விக்கிரமரட்ன, ஹர்ஷ டி சில்வா மற்றும் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (அ)

# இழப்பீட்டு பணியகம் ஊடாக 1753 குடும்பங்களுக்கு இழப்பீடு

## அமைச்சர் விஜயதாஸ தகவல்

கொழும்பு, டிசெ. 07

இழப்பீட்டு பணியகம் ஊடாக ஆயிரத்து 753 குடும்பங்களுக்கு இதுவரை இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

காணாமல்போனோர் அலுவலகத்தின் பணிகளை வேகமாக முன்னெடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இறுதிப்படுத்தப்பட்ட ஆயிரத்து 653 ஆவணங்கள் இதுவரை எமக்கு கிடைக்கப்பெற்றுள்ளன.

அத்துடன், இழப்பீடு தொடர்பான விசாரணைகளின் பிரகாரம் ஆயிரத்து 753 குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

3 ஆயிரத்து 320 ஆவணங்களுக்கு (குடும்பங்களுக்கு) இழப்பீடு வழங்கப்படவுள்ளது. அதேபோல 5 ஆயிரத்து 246 ஆவணங்கள் எஞ்சியுள்ளன.

இந்தியாவில் இருந்து 11 ஆயிரத்து 780 பேர் மீண்டும் நாடு திரும்பியுள்ளனர். இவர்களின் பிரச்சனைகளை தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேபோல போதைப் பொருள் ஒழிப்பு சம்பந்தமாக 9 மாகாணங்களிலும் செயலணி உருவாக்கப்படும். இதன் முதற்கட்டமாக வடக்கில் ஆளுநர் தலைமையில் நிறுவப்பட்டுள்ளது - என்றார். (அ)

# மருந்து பொருட்கள் கோரி வவுனியாவில் போராட்டம்!




வவுனியா, டிசெ. 07

மருந்து பொருட்கள் விலையேற்றத்தைக் கண்டித்து வடக்கு - கிழக்கு பெண்கள் ஒன்றியம் நேற்று கவனயீர்ப்பு போராட்டமொன்றையும் ஏற்பாடு செய்திருந்தது.

வவுனியா குருமன்காடு சந்தியில் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில், 'இலங்கை அரசே அத்தியாவசிய மருந்து வகைகளும் மருத்துவ சாதனங்களும் மக்களுக்கு கிடைக்க உடனடியாக வழிவகை செய்' என்ற பாதையை தாங்கியிருந்தனர்.

குறித்த போராட்டம் சுமார் ஒரு மணிநேரம் இடம்பெற்றது. (அ)

# டயானா கமகே பிரிட்டன் பிரஜை?

கொழும்பு, டிசெ. 07

பாராளுமன்ற உறுப்பினர் டயானா கமகே பிரிட்டன் பிரஜை என கண்டறியப்பட்டுள்ளதால் அவருக்கு இலங்கை கடவுச்சீட்டை வழங்க முடியாது என குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த கடிதத்தில் திருமதி கமகே 2004 ஆம் ஆண்டு முதல் இங்கிலாந்து குடியுரிமை பெற்றுள்ளார். அவர் 521398876 என்ற இங்கிலாந்து கடவுச்சீட்டை வைத்துள்ளார் என குறிப்பிடப்பட்டுள்ளது.

"இருப்பினும், அவர் ஜனவரி 24, 2014 அன்று என். 5091388 என்ற இலங்கைக் கடவுச்சீட்டைப் பெற முடிந்தது. அவர் நவம்பர் 5, 2018 அன்று இராஜதந்திர கடவுச்சீட்டையும் பெற்றுள்ளார். அதை நிரூபிக்கும் ஆவணத்தை அவர் சமர்ப்பிக்காததால், புதிய இராஜதந்திர கடவுச்சீட்டை வழங்க முடியாது. அவர் தனது இங்கிலாந்து குடியுரிமையை விட்டுவிட்டார்" என கட்டுப்பாட்டாளர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

திருமதி கமகே அனுப்பிய விசா விண்ணப்பங்களின் ஆவணங்களையும் கட்டுப்பாட்டாளர் இணைத்துள்ளார்.

அப்போது அவையில் இருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, டயானா கமகேவின் கடவுச்சீட்டு விவகாரத்தை நாடகமாக்க வேண்டாம் என தெரிவித்தார். நீங்கள் பாராளுமன்றத்துக்கு வருவதற்கு கட்சியை வழங்கியவர் திருமதி கமகே. எனவே அவரது கடவுச்சீட்டு விவகாரத்தை பிரச்னையாக்க வேண்டாம் என ஜனாதிபதி தெரிவித்தார்.(அ)

# மக்கள் நலத்திட்டத்தில் ஆளுநர்கள் பின்னடிப்பு

## முன்னாள் ஜனாதிபதி குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 07

விலங்குகளால் பயிர்களுக்கு ஏற்படும் சேதத்தை சமாளிக்க 2012 ஆம் ஆண்டு ஆளுநர்களுக்கு அனுப்பப்பட்ட பணம் ஆண்டு இறுதியில் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. இந்த விடயத்தில் தலையிட ஆளுநர்கள் விரும்பவில்லை என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

வரவு-செலவுத் திட்டத்தில் விவசாய அமைச்சின் செலவீனங்கள் மீதான குழு விவாதத்தின்போதே முன்னாள் ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் நான்கில் ஒரு பங்கு உணவுகள் விலங்குகளால் அழிக்கப்படுவதாகவும் மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார். (அ)

# அரசியலமைப்பு பேரவைக்கான நியமனத்தைத் தாமதப்படுத்துக!

## சபையில் எதிர்க்கட்சி கோரிக்கை

கொழும்பு, டிசெ. 07

அரசியலமைப்பு பேரவைக்கான நியமனத்தை தாமதப்படுத்துமாறு சபாநாயகரிடம் எதிர்க்கட்சி பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல கோரிக்கை விடுத்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தலைத் தாமதப்படுத்தும் நோக்கத்துடன் அரசியலமைப்பு பேரவை மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்கள் விரைவாக நியமனம் செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனவே இந்த சூழ்ச்சிக்கு பலியாக வேண்டாம் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல கேட்டுக்கொண்டார். (அ)

உங்கள் துயரங்களை பகிர்ந்துகொள்ள
யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு தளம்
துயர் .நெற்
THUYAR.NET
துயர் நெற்றில் பிரசுரமாகும்
அனைத்து விளம்பரங்களும்
யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும்
ஈழநாடு
Eelanadu
ஈழநாடு தினசரியிலும் வெளியிடப்படும்
யாழ்ப்பாணத்திலிருந்து ஒளிபரப்பாகும்
DAN NEWS
டான் நியூஸ் தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பாகும்
விபரங்களுக்கு: thuyar.net
Tel: 0094 752 225 225

# புலிகளுடன் தொடர்புடையவர்களின் வழக்குகளில் விசேட கவனம் தேவை!



## பிரதம நீதியரசரிடம் நீதி அமைச்சர் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 07

சிறையில் உள்ள விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புடையவர்களின் வழக்குகளில் விசேட கவனம் செலுத்துமாறு பிரதம நீதியரசரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றிய போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புடைய குற்றச்சாட்டின் அடிப்படையில் 2015ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாடளாவிய ரீதியில் உள்ள சிறைச்சாலைகளில் 400 பேர் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

அப்போது நான் நீதியமைச்சராக பதவி வகித்தேன். சிறைச்சாலைகளில் இருந்த விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புடையவர்களின் எண்ணிக்கை 110 ஆக குறைக்கப்பட்டது.

நல்லாட்சி அரசாங்கத்தில் விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புடையவர்களின் வழக்குகளை துரிதப்படுத்த விசேட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதற்கமைய கொழும்பு மற்றும் அநுராதபுரத்தில் விசேட மேல நீதிமன்றங்கள் ஸ்தாபிக்கப்பட்டு வழக்கு எண்ணிக்கை 60 ஆக குறைக்கப்பட்டது.

நாடளாவிய ரீதியில் உள்ள சிறைச்சாலைகளில் விடுதலை புலிகள் அமைப்புடன் தொடர்புடைய குற்றச்சாட்டின் அடிப்படையில் 31 பேர் உள்ளனர்.

இவர்களில் 16 பேர் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்ட நிலையிலும் 15 பேர் சந்தேகத்தின் அடிப்படையிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

சிறையில் உள்ள விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புடையவர்களின் வழக்குகளில் விசேட கவனம் செலுத்துமாறு பிரதம நீதியரசரிடம் கோரிக்கை விடுத்துள்ளேன்.

சட்டம் மற்றும் மனிதாபிமான அடிப்படையில் தீர்வு காண்பது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகளில் உள்ள கைதிகள் ஒவ்வொருவரின் தனிப்பட்ட விடயங்களை பெற்றுக்கொண்டு, சுகாதாரத் துறை பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் ஒரு விசேட குழுவை அமைத்து சிறைக் கைதிகளின் வயது மற்றும் உடல்நிலை ஆகியவற்றை கருத்திற்கொண்டு ஜனாதிபதியின் அனுமதியுடன் அவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது-என்றார். (அ)

# வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் அந்நியச் செலாவணிக்கு வரி இல்லை

## மத்திய வங்கி விளக்கம்

கொழும்பு, டிசெ. 07

வெளிநாடுகளில் பணியாற்றும் இலங்கையர்கள் அனுப்பும் அந்நியச் செலாவணிக்கு வரி அறவிடப்படமாட்டாது என்று இலங்கை மத்திய வங்கி விளக்கம் அளித்துள்ளது.

இலங்கையர்கள் அனுப்பும் அந்நியச் செலாவணிக்கு வரி அறவிடப்படபோவதாக, பரவி வரும் தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவை என மத்திய வங்கி கூறியுள்ளது.

இதேபோன்று இந்த பணத்தை பலவந்தமாக இலங்கை நாணயத்திற்கு மாற்றப்படமாட்டாது என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், வெளிநாடுகளில் உள்ள இலங்கை ஊழியர்களுக்கு தற்போது வழங்கப்படும் பல்வேறு சலுகைகளை எவ்வித மாற்றமும் இன்றி அதே முறையில் தொடர்ந்து அனுபவிக்க முடியும் என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (அ)

# பல்கலைக்கு தெரிவான ஒன்பதாம் தர மாணவன்!



கொழும்பு, டிசெ. 07

2021 க.பொ.த உயர் தர பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் மாணவர்களுக்கான பல்கலைக்கழக வெட்டுப்புள்ளிகள் அண்மையில் வெளியானது. இதன்படி 14 வயது மாணவர் ஒருவர் பல்கலைக்கழக அனுமதியை பெற்றுள்ளார்.

மாவரமண்டிய கடவட நானமல் கல்லூரியில் கல்வி கற்கும் 14 வயதுடைய தேவும் சனஹாஸ் ரண்சிங்க என்ற மாணவனே இவ்வாறு பல்கலைக்கழக அனுமதியை பெற்றுள்ளார்.

குறித்த மாணவன் வணிகப் பிரிவில் பல்கலைக்கழக அனுமதியை பெற்றுள்ளார்.

இலங்கையில் பல்கலைக்கழகத்துக்கு தெரிவான 9ஆம் தர மாணவனான இவர் 8ஆம் தரம் கல்வி கற்கும்போது க.பொ.த சாதாரண தரப் பரீட்சை எழுதி, 6 மாதங்களுக்கு பின், 9 தரத்தில் க.பொ.த உயர்தர வணிகப் பிரிவில் பரீட்சைக்கு தோற்றினார்.

இதற்கமைய உயர்தரப் பிரிவில் இவர் மூன்று 'பி' சித்திகளை பெற்றுள்ளார். இதன்படி அவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் நுழைவதற்குத் தகுதி பெற்றுள்ளார்.

முதலாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை தேவம் குருகுல வித்தியாலயத்தில் படித்த அவர், அதன் பின்னர் நானமல் வித்தியாலயத்தில் கல்வி பயின்று வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (அ)

# கிளிநொச்சி பாடசாலையில் மின்சார உபகரணங்கள் திருட்டு!

கிளிநொச்சி, டிசெ. 07

பாடசாலையில் பொருத்தப்பட்டிருந்த மின் உபகரணங்கள் திருடப்பட்ட சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரமந்தனாறு மகாவித்தியாலயத்தில் கடந்த முதலாம் திகதி புதிய கட்டடத் தொகுதி ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

குறித்த கட்டடத்தில் பொருத்தப்பட்டிருந்த மின் இணைப்புக்கள், இரண்டு மின் விசிறிகளும் திருடப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.



திறப்பு விழாவின்போது, மண்டபத்துக்குரிய திறப்புகள் கோர்வையாக கதவில் தொங்கவிடப்பட்டிருந்த நிலையில், அதிலி ருந்து திருடப்பட்ட இரண்டு சாவிகளைக் கொண்டே திறந்து திருடப்பட்டுள்ளது.

சுமார் நான்கு லட்சம் ரூபாய் பெறுமதியான மின் இணைப்புகள் பொருத்தப்பட்டிருந்த நிலையில், இவ்வாறு திருடப்பட்டுள்ளது. (அ)

# மின் கட்டணம் உயர்த்துவது அத்தியாவசியமான ஒன்று!

## அமைச்சரவையில் கூறினார் காஞ்சன

கொழும்பு, டிசெ. 07

அடுத்த வருடம் முதல் மீண்டும் மின் கட்டணத்தை உயர்த்துவது அத்தியாவசியமானது என எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர அமைச்சரவைக்கு அறிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் கூடிய அமைச்சரவையில் அமைச்சர் காஞ்சன விஜேசேகர இந்த விடயத்தைக் குறிப்பிட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் மீண்டும் மின்கட்டணத்தை அதிகரிக்கவேண்டும் என்ற பிரேரணை தொடர்பில் நேற்று முன் தினம் அமைச்சரவையில் நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மின் கட்டணத்தை அதிகரிக்காமல் மின்சார சபைக்கு ஏற்படும் நட்டத்தை குறைக்க மாற்று வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த சில அமைச்சர்கள் யோசனை முன்வைத்தனர்.

எவ்வாறாயினும், மின்சார கட்டணத்தை அதிகரிக்காமல் தற்போதுள்ள பிரச்னைக்கு தீர்வு காண முடியாது என எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

கட்டணத்தை அதிகரிக்காவிட்டால் நாளாந்தம் சுமார் 06 மணிநேரம் மின்வெட்டு ஏற்படும் என அமைச்சர் கூறினார்.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு சில நிவாரணங்கள் வழங்கப்படவேண்டும். அத்துடன், மின்சாரக் கட்டணங்கள் அதிகரிக்கப்படவேண்டும் எனவும் அமைச்சர் அமைச்சரவையில் மேலும் சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும், குறித்த கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பில் இறுதி இணக்கப்பாடு எட்டப்படாமலேயே கலந்துரையாடல் நிறைவடைந்ததாக தெரிவிக்கப்பட்டது.(அ)

# புதிய வருடத்தின் முதல் பாராளுமன்ற அமர்வு ஜனவரி 17ஆம் திகதி ஆரம்பம்

கொழும்பு, டிசெ. 07

எதிர்வரும் 10ஆம் திகதி சனிக்கிழமைக்குப் பதிலாக 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தை கூட்டுவதற்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக பாராளுமன்றச் செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக தெரிவித்தார்.

வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக எதிர்வரும் 10ஆம் திகதியை முழு நாளும் ஒதுக்குவதற்கு இதற்கு முன்னர் நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய, எதிர்வரும் 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முழு நாளும் வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக ஒதுக்கப்பட்டிருப்பதுடன், முன்னர் தீர்மானிக்கப்பட்டபடி 09ஆம் திகதி சேர்பெறுமதி வரி(திருத்தச்) சட்டமூலம் மற்றும் உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டமூலம் ஆகிய வற்றின் மீதான இரண்டாவது மதிப்பீட்டு விவாதத்தை நடத்துவதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டதாக செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

அத்துடன், எதிர்வரும் 08ஆம் திகதி நடைபெறவுள்ள ஒதுக்கீட்டுச் சட்டமூலம் மீதான மூன்றாவது மதிப்பீட்டுக்கான வாக்கெடுப்பை பி.ப 5.00 மணிக்கு நடத்துவதற்கும் குழுவில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

1979ஆம் ஆண்டின் 61ஆம் இலக்க அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் கீழ் ஜனாதிபதியினால் வெளியிடப்பட்ட 2022.12.03ஆம் திகதிய 2308%62 இலக்க வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளையை பாராளுமன்றத்தின் அனுமதிக்காக எதிர்வரும் 08ஆம் திகதி சமர்ப்பிப்பதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், எதிர்வரும் 13 ஆம் திகதிக்குப் பின்னர் 2023 ஆம் ஆண்டு ஜனவரி 17ஆம் திகதி மீண்டும்

பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்கு பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக பாராளுமன்றச் செயலாளர் நாயகம் தெரிவித்தார். (அ)

## தமிழ் மக்களை...

நேற்று யாழ்ப்பாணத்தில் அவர் நடத்திய விசேட செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், 'வடக்கு மாகாணத்துக்காக எந்தவொரு பொருளாதார மையங்களையும் அமைக்கப்போவதாக வரவு - செலவு திட்டத்தில் அரசாங்கம் குறிப்பிடவில்லை. திருகோணமலையில் ஒரு பொருளாதார மையத்தை அமைக்கப் போவதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். சிங்களவர்களை அங்கு கொண்டுவந்து அந்த மையத்தை அபிவிருத்தி செய்யப் போகிறார்கள்.

'539 பில்லியன் ரூபாய் 2023இல் பாதுகாப்பு செலவினமாக ஒதுக்கப்பட்டுள்ளது. எல்லா விதத்திலும் மக்களின் வாழ்வாதாரங்களை பிடித்து தங்கள் வசம் வைத்துக் கொண்டு சிவில் நடவடிக்கைகளில் ஈடுபட அவர்கள் முயற்சிக்கிறார்கள். 539 பில்லியன் ரூபாய் ஒதுக்குவதற்குக் காரணம் இராணுவத்தை இங்கு வைத்திருந்து வடக்கு மாகாண மக்களை அடக்கி வருங்காலத்திலே பொருளாதார காரணங்களுக்காக அவர்களை விரட்டும் ஒரு நிலையை எற்படுத்துவதே.

'தெற்கிலிருந்து தமிழ் மக்களை விரட்டிவிட்டு - அவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பிவிட்டு, இப்போது வடக்கு மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் வாழும் தமிழ் மக்களை வெளிநாடுகளுக்கு விரட்டவும் - இடம்பெயர செய்யவும் பல நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். இதற்கு முக்கிய பாதுகாப்பாக - அனுசரணையாளர்களாக இருப்பது இராணுவத்தினரே என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

'நாளைமறுதினம் (நாளை) வரும் பாதீட்டின் வாக்கெடுப்பில் கஜேந்திரகுமார் தவிர்ந்த மற்றைய தமிழ் கட்சிகளுடன் பேசியே முடிவு எடுப்பேன். எப்படியும் பாதீட்டை எதிர்க்க மாட்டேன். இந்த அரசாங்கம் விழுவதற்கு நான் ஒரு காரணமாக இருக்க மாட்டேன். ஏனெனில், இந்த அரசாங்கத்தை விட்டால் அடுத்து வரும் அரசாங்கம் இதனிலும் பார்க்கக் கேவலமான அரசாங்கமாக இருக்கக்கூடும் என்று நான் எண்ணுகிறேன். அவ்வாறான ஒரு நிலைமை ஏற்பட்டால் நாட்டின் நிலைமை இன்னும் சீர்கெடும். தற்போது இருக்கும் இவரை (ரணிலை) தொடர்ந்து இருக்கச் செய்து பொருளாதார ரீதியாக சில நன்மைகளைப் பெற்றுக்கொள்ள அவருடன் சேர்ந்து செல்ல வேண்டிய அவசியமும் எங்களுக்கு இருக்கின்றது.

'நாங்கள் எதிர்பார்க்கும் எல்லாவற்றையும் சிங்கள அரசாங்கங்களிடமிருந்து எடுக்க முடியாது. அதற்காக அவர்களுக்கு எதிராக இருந்து கொண்டும் அவர்களிடம் இருந்து எதனையும் பெற்றுக்கொள்ளவும் முடியாது.

'தமிழ் மக்களின் பிரச்னைகளை தீர்க்க வேண்டும் என்று உண்மையாகவே நினைத்தால், ஒற்றையாட்சிக்கு புறம்பான ஓர் ஆட்சி முறையை எவ்வாறு நாங்கள் பேசி ஒரு முடிவுக்கு வரலாம் என்பதை அவர்கள் (அரசாங்கம்) முன்வைத்தால் தான் அவ்வாறான பேச்சுகளுக்கு நாங்கள் செல்ல முடியும்' - என்றார். (ஐ)

## அதிகாரத்தை...

கடற்றொழில் அமைச்சு தொடர்பான வரவு - செலவுத் திட்ட குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"ஜனாதிபதி தமிழ் மக்களின் பிரதிநிதிகளுக்கு விடுத்திருக்கின்ற அழைப்பை ஏற்று அதனை எமது மக்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்வதற்கு தமிழ் அரசியல் தரப்பினர் முன்வர வேண்டும்.

எம்மை பொறுத்தவரையில், தற்போது நாட்டின் அரசியல் யாப்பில் நடைமுறையில் இருக்கின்ற 13ஆவது திருத்தத்தைப் பலப்படுத்தி அதனை முன்னெடுப்பதையே எமது மக்களின் அரசியல் ரீதியான பிரச்னைக்கு ஓர் ஆரம்பத் தீர்வாகக் கருதுகிறோம். இல்லாததை பற்றிக் கதைத்து இருப்பதையும் கைவிட்டு விடக்கூடாது என்பதை நாம் வலியுறுத்துகிறோம்.

தமிழ் மக்களின் பிரச்னை தொடர்பில், கிணறு வெட்ட பூதம் கிளம்பிய கதையாக இப்போதே சில நாடகங்கள் அரசியல் அரங்கில் மேடையேற்றப்பட்டு வருவதையும் அவதானிக்க முடிகின்றது" - என்றார். (ஐ)

## அதிகாரிகளின்...

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொகுதி தொடர்பான எல்லை நிர்ணய குழுவின் கூட்டங்கள் மாவட்ட ரீதியில் இடம்பெறுகின்றன. உள்ளூராட்சி மன்றத் தேர்தலை உரிய காலத்தில் நடத்த வேண்டுமாக இருந்தாலும் அவசர அவசரமாக எல்லை மீள்நிர்ணயம் செய்யப்பட்டு மக்கள் பிரதிநிதிகளினதும் மக்களின் விருப்பமில்லாமல் அதிகாரிகளின் விருப்பத்துக்கு அமைய எல்லை நிர்ணயம் செய்யப்படுவது. உண்மையான நோக்கத்துக்கு அப்பால்பட்டதாகும்.

அரச அதிகாரிகளின் விருப்பத்துக்கு அமைய மாத்திரம் எல்லை நிர்ணயம் செய்யப்படுகிறது. இது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். நடைமுறையில் உள்ள தேர்தல் முறைமைக்கு அமைய தேர்தல் நடத்தப்பட வேண்டும். எல்லை நிர்ணயங்களை தமது விருப்பத்துக்கு அமையவே அரசாங்கம் நிர்ணயம் செய்ய முயற்சிக்கிறது. இது முழுமையாக நிறுத்தப்பட வேண்டும்.

வனவள திணைக்களத்துக்கு சொந்தமான காணிகள் பயிர்செய்கைகளுக்காக வழங்கப்படும் என விவசாயத்துறை அமைச்சர் குறிப்பிட்டார். ஆனால், இதுவரை அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை.

வடக்கு மாகாணத்தில் வடக்கு மாவட்டத்தில் மக்கள் காலம் காலமாக விவசாயம் செய்த காணிகளை வனவளத்துறை திணைக்களம் கையகப்படுத்தியுள்ளது. ஆகவே இவ்விடயம் தொடர்பில் விவசாயத்துறை அமைச்சு உரிய கவனம் செலுத்த வேண்டும். பொருளாதார பாதிப்பில் இருந்து மீள வேண்டுமாயின் நாட்டில் விவசாயத்துறை மேம்படுத்த வேண்டும். ஆனால், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் விவசாய காணிகளை வனவளத்துறை திணைக்களம் ஏதாவதொரு காரணத்தை குறிப்பிட்டு கொண்டு சுவீகரிப்பதையே பிரதான இலக்காக கொண்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நிலவும் மீனவர் பிரச்னை, விவசாய பிரச்னை தொடர்பான கூட்டங்களுக்கு மக்கள் பிரதிநிதிகள் அழைக்கப்படுவதில்லை. வடக்கு மாவட்டத்தில் ஒருங்கிணைப்பு குழு நியமிக்கப்படாத காரணத்தால் அரச அதிகாரிகள் தன்னிச்சையாக செயல்படுகிறார்கள். மக்கள் பிரநிதிகள் மக்கள் பிரச்னை தொடர்பில் அவதானம் செலுத்த உரிய வழிமுறை காணப்படவில்லை. அனைத்து பிரச்னைகளுக்கும் பாராளுமன்றத்தின் ஊடாக மாத்திரம் தீர்வு காண முடியாது, ஆகவே, மக்கள் பிரச்னைகளுக்கு தீர்வு காண மாவட்ட மட்டத்தில் உரிய நடவடிக்கை எடுக்க அரசாங்கம் அவதானம் செலுத்த வேண்டும் - என்றார். (ஐ)

## பல்கலை....

வைக்கப்பட்டுள்ளனர். அரசாங்கத்துக்கு எதிராக சதி நட வடிக்கையில் ஈடுபட்டனர் என்ற குற்றச் சாட்டில் இவர்கள் இருவர் உள்ளிட்ட பல்கலைக்கழக மாணவர்கள் மூவர் பயங்கரவாத தடை சட்டத்தில் கைது செய்யப்பட்டனர். ஒருவர் விடுதலை செய்யப்பட்ட நிலையில், இருவரும் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டனர்.

இந்நிலையில், கடுவலை நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இருவரும் முற்படுத்தப்பட்டனர். இவர்களை தலா ஒரு இலட்சம் ரூபாய் சரீரப் பிணையில் செல்ல கடுவலை நீதிவான் அனுமதியளித்தார்.

எனினும், சட்ட மா அதிபரின் ஆலோசனை கிடைக்கும் வரை வேறொரு வழக்கு தொடர்பில் இருவரும் எதிர் வரும் 12 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

# இலங்கையின் கடன் நெருக்கடி குறித்து பேச ஐ. எம். எவ்., உலக வங்கிக்கு சீனா அழைப்பு!

பீஜிங், டிசெ. 07

இலங்கை போன்ற பொருளாதார நெருக்கடிகளால் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளின் கடன் நெருக்கடி உள்ளிட்ட முக்கிய விடயங்கள் தொடர்பில் பேச்சு நடத்துவதற்கு சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் பிரதானிகளுக்கு சீனா அழைப்பு விடுத்துள்ளது.

இதற்கமைய இவ்வாரம் சர்வதேச பொருளாதார மற்றும் நிதி நிறுவனங்களின் பிரதானிகள் குழுவொன்று பீஜிங்குக்கு செல்லவுள்ளனர் என்று சீன வெளிநாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்தோடு பீஜிங்கில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சீன வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் பேச்சாளர் மா ஓ கின்னிடம் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்கு பதிலளித்த அவர் ,

சீனாவுக்கு சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஏனைய சர்வதேச பொருளாதார மற்றும் நிதி நிறுவனங்களுடன் நீண்ட கால பலம்மிக்க தொடர்புகள் காணப்படுகின்றன. கடன் மறுசீரமைப்பு தொடர்பில் ஏதேனும் அறிவிப்பினை அறிவிக்க வேண்டியேற்பட்டால் , வரும் நாட்களில் அது தொடர்பில் அறிவிப்பதற்கு சீன வெளிநாட்டலுவல்கள் அமைச்சு தயாராகவுள்ளது.

இலங்கையின் கடன் நெருக்கடி தொடர்பில அவதானிக்கும் போது, பொருளாதார நெருக்கடிகள் மற்றும் சவால்களுக்கு சீன முக்கியத்துவமளித்து கவனம் செலுத்துகின்றது. இலங்கை அதன் நெருக்கடிகளை உரிய முறையில் தீர்த்துக் கொள்வதற்காக செயற்பட்டு வரும் நிதி நிறுவனங்களுக்கு சீனாவின் முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும்.

இலங்கை தற்போதைய நெருக்கடிகளிலிருந்து மீண்டு, நிலையான அபிவிருத்தியை ஏற்படுத்திக் கொள்வதற்காக குறித்த நாடுகள் மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்கள் சீனாவுடன் சாதகமான முறையில் செயற்படும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம் என்று குறிப்பிட்டார்.

இந்நிலையிலேயே இலங்கையின் கடன் நெருக்கடியை தீர்த்தல் உள்ளிட்ட முக்கிய விடயங்கள் தொடர்பில் பேச்சுகளை முன்னெடுப்பதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிரிஸ்டலினா ஜோர்ஜூவா மற்றும் உலக வங்கியின் தலைவர் டேவிட் மல்பாஸ் ஆகியோருக்கு சீனா அழைப்பு விடுத்துள்ளதாக சீன வெளிநாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை உள்ளிட்ட பொருளாதார நெருக்கடிகளால் பாதிக்கப்பட்டுள்ள நாடுகள் அவற்றிலிருந்து மீண்டு, நிலையான அபிவிருத்தியை அடைவதற்காக இந்த பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக சீனா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விபசார விடுதிகளை நடத்திய முன்னாள் சிப்பாய் சிக்கினார்

கொழும்பு, டிசெ. 07

அநுராதபுரம் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் இரகசியமாக 3 விபசார விடுதிகளை நடத்தி வந்த 42 வயதான கொமாண்டோ படையின் முன்னாள் சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் மாத்தளை சந்திப் பகுதியில் பயணித்துக் கொண்டிருந்தபோதே சுமார் 4 இலட்சம் ரூபா பெறுமதியான 11 கிராம் 170 மில்லிகிராம் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டதாக அநுராதபுரம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அநுராதபுரம் நகரிலுள்ள விபசார விடுதிகளிலும் மசாஜ் நிலையங்களிலும் பணிபுரியும் பெண்கள் மற்றும் சேவைகளைப் பெறுவதற்காக குறித்த இடங்களுக்குச் செல்லும் ஆண்களை இலக்கு வைத்து இந்த ஹெரோயின் போதைப்பொருள் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள பொலிஸார், குறித்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

## உத்தியோகபூர்வ...

தெரிவித்துள்ளனர்.

கடந்த 23ஆம் திகதி புதன்கிழமை பாராளுமன்றத்தில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இனப் பிரச்னை தீர்வு விடயம் குறித்து தமிழ் கட்சிகளுடன் பேசுவதற்கு தயார் என்று ஜனாதிபதி விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் அறிவித்திருந்தார். அத்துடன், எதிர்வரும் 13ஆம் திகதி பேச்சு ஆரம்பமாகும் என்றும் தகவல்கள் வெளியாகின.

இந்த நிலையிலேயே தமிழ்த் தேசியக் கட்சிகள் பேச்சுக்கான அழைப்பு தொடர்பில் உத்தியோகபூர்வமான கடிதங்கள் எவையும் தமக்குக் கிடைக்கவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

கலந்துரையாடலுக்கான திகதியை ஜனாதிபதி உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் பட்சத்தில் தங்களுக்குள் கலந்துரையாடி அடுத்த கட்ட செயல்பாடுகளை முன்னெடுக்க முடியும் என தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

ஜனாதிபதி பாராளுமன்றத்தில் பேச்சுக்கு அழைப்பு விடுத்திருந்த போதிலும், உத்தியோகபூர்வமாக எவ்வித அழைப்பும் இதுவரை விடுக்கப்படவில்லை என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் குறிப்பிட்டார். (ஐ)

## மதுபானம்...

நாட்டின் மக்கள் தொகையில் 2021ஆம் ஆண்டில் 28 வீதத்தினர் மது அருந்தினர். மது அருந்துபவர்கள் உயர் இரத்த அழுத்தம், இதய நோய், பக்க வாதம், கல்லீரல் நோய்கள், சமிபாட்டு பிரச்னைகள், புற்றுநோய்கள் (மார்பகம், வாய், தொண்டை, உணவுக்குழாய்) போன்ற நோய்களுக்கு ஆளாகின்றனர். இதனால், நாளொன்றுக்கு 55 பேர் உயிரிழக்கின்றனர்.

புகையிலை அதன் பாவனையாளர்களில் பாதிப் பேரைக் கொல்கிறது. புகையிலை தொடர்பான நோய்களால் ஒவ்வொரு நாளும் சுமார் 60 பேர் மரணமடைகின்றனர்.

புகையிலை, உடல்நலப் பிரச்னைகள் புற்றுநோய், இதய நோய், பக்கவாதம், நுரையீரல் நோய், நீரிழிவு நோய், நாள்பட்ட தடுப்பு நுரையீரல் நோய் மற்றும் நாள்பட்ட மூச்சுக்குழாய் அழற்சி ஆகிய நோய்களை ஏற்படுத்துகிறது.

2016 இல் புகையிலை வரி மூலம் கிடைத்த வருமானம் ரூ. 88.5 பில்லியன் ரூபாயாகும். இதேவேளை புகையிலை தொடர்பான நோய்களுக்கான சுகாதாரச் செலவு 15.3 பில்லியன் ரூபாயாகும்.

இந்தத் தொகையில், வரி செலுத்துவோர் ரூ.8.3 பில்லியன் ரூபாயை சுமக்க வேண்டும், தனிநபர்கள் ரூ.5.9 பில்லியன் ரூபாயை செலுத்தினர் மற்றும் சுகாதார காப்பீடு ரூ. 1.1 பில்லியன் ரூபாய் என்றும் அவர் கூறினார். (ஐ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු



## புதிய விடியல் உதைபந்தாட்டம் சென். நீக்கிலஸ் இறுதிக்கு தகுதி!

யாழ்ப்பாணம், டிசெ. 07

புதிய விடியல் உதைபந்தாட்ட தொடரில் பரபரப்பான முதல் அரையிறுதிப் போட்டியில் வலுவான குருநகர் பாடும்மீன் அணியை வீழ்த்தி நாவாந்துறை சென். நீக்கிலஸ் இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது.

டான் தொலைக்காட்சி குழுமம் யாழ். உதைபந்தாட்ட லீக்கின் பங்களிப்புடன் புதிய விடியல் உதைபந்தாட்ட தொடரை நடத்துகிறது.

துரையப்பா பொது விளையாட்டரங்கில் நடக்கும் இந்தத் தொடரில் நேற்று செவ்வாய்க்கிழமை முதல் அரையிறுதிப் போட்டி நடைபெற்றது. இதில், யாழ்ப்பாணத்தின் மிகப் பிரபலமானதும் பலமானதுமான குருநகர் பாடும்மீன் - நாவாந்துறை சென். நீக்கிலஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

நிறைந்த ரசிகர் கூட்டத்தின் நடுவே நடைபெற்ற இந்தப் போட்டியில், முதல்பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் சமபலத்துடன் மோதின.

இரு அணிகளின் முன் கள, பின் கள வீரர்களின் சிறப்பாட்டம் காரணமாக இரு அணிகளாலும் கோல் எதனையும் அடிக்க முடியவில்லை.

இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பமானபோது, குருநகர் பாடும்மீன் அணியின் முன்கள வீரர்கள் எதிரணிக்கு கடும் சவாலை வழங்கி முதலாவது கோலை பதிவு செய்தனர்.

பாடும்மீன் அணிக்கு பதிலடி கொடுக்கும் வகையில், சென். நீக்கிலஸ் அணியும் ஒரு கோலை பதிவு செய்யவே போட்டி 1-1 என்று விறுவிறுப்பான கட்டத்தை நோக்கி நகர்ந்தது.

எந்த அணி வெற்றி பெறும் என்று பெரும் எதிர்பார்ப்பு நிலவிய நிலையில், இரண்டாவது பாதி ஆட்டம் நிறைவடைய 5 நிமிடங்கள் இருக்கையில் சென். நீக்கிலஸ் அணி வீரர் மைதானத்தின் மத்திய பகுதியில் இருந்து மிக வேகமாக உதைத்த பந்து கோலாக மாறியது.

இதனால் சென். நீக்கிலஸ் அணி 2 - 1 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்ற நிலையில் இரண்டாவது பாதி ஆட்டம் நிறைவடைந்தது.

அரையிறுதியில், பாடும்மீனை வீழ்த்திய சென். நீக்கிலஸ் 8ஆவது புதிய விடியல் உதைபந்தாட்ட தொடரின் இறுதிப் போட்டிக்கு முதலாவது அணியாக சென். நீக்கிலஸ் நுழைந்தது.

**இன்றைய ஆட்டம்**

இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு துரையப்பா பொது விளையாட்டரங்கில் நடைபெறவுள்ள இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் நாவாந்துறை சென்.மேரீஸ் அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றீஸ் அணி மோதவுள்ளது.

### உலகக் கிண்ண உதைபந்து

## முதன்முதலாக மொராக்கோ காலிறுதிக்குள் நுழைந்தது!




டோஹா, டிசெ. 07

120 நிமிடங்கள் நீடித்த போட்டியில் வலுவான ஸ்பெயின் அணிக்கு சவால் விடுத்து, சமநிலை தவிர்ப்பு உதையில் அந்த அணியை தோற்கடித்து காலிறுதிக்குள் அதிரடியாக நுழைந்தது மொராக்கோ.

உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடர் கட்டாரில் நடக்கிறது.

இதில், நேற்றிரவு நடைபெற்ற 16 அணிகள் சுற்றுப் போட்டியில் முன்னாள் சம்பியன் ஸ்பெயினை சமநிலை தவிர்ப்பு உதையில், 3 - 0 என்ற கோல் கணக்கில் மொராக்கோ வெற்றி பெற்றது.

போட்டியில் நிர்ணயிக்கப்பட்ட 90 நிமிட ஆட்ட நேரத்தில் எந்த அணியும் கோல் அடிக்கவில்லை. இதையடுத்து, மேலதிகமாக 30 நிமிடங்கள் வழங்கப்பட்டன. இதிலும் கோல் அடிக்கப்படவில்லை.

இதையடுத்து, சமநிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட்டது. இதில் மொராக்கோ 3 கோல்களை போட்டது. ஸ்பெயின் கோல் எதையும் அடிக்கவில்லை. மொராக்கோ வீரர்களான அப்துல் ஹமீத் சபிரி, ஹக்கீம் ஸியேச், அஸ்ரப் ஹக்கிமி கோல்களை அடித்தனர்.

மொராக்கோவின் கோல் காப்பாளர் யாசின் பவ்னோ சிறப்பாக செயல்பட்டு ஸ்பானிய வீரரகளின் பந்துகளை தடுத்திருந்தார். உலகக் கிண்ண உதைபந்தாட்ட வரலாற்றில் மொராக்கோ காலிறுதிக்கு தகுதி பெற்றிருப்பது இதுவே முதல் தடவையாகும். (ஐ)

### எல். பி. எல். இருபது - 20 தொடர்:

## வெற்றியுடன் தொடங்கியது யாழ்ப்பாணம் கிங்ஸ் அணி!



அம்பாந்தோட்டை, டிசெ. 07

காலி கிளாடியேற்றர்ஸ் அணியை 24 ஓட்டங்களால் வெற்றி கொண்டதன் மூலம் எல். பி. எல். நடப்பு தொடரை வெற்றியுடன் தொடங்கியது யாழ்ப்பாணம் கிங்ஸ் அணி.

லங்கா பிறீமியர் லீக் என்று அழைக்கப்படும் எல். பி. எல். இருபது - 20 தொடர் நேற்று அம்பாந்தோட்டையில் ஆரம்பமானது. நடப்பு சம்பியனான யாழ்ப்பாணம் கிங்ஸ் அணியும் காலி கிளாடியேற்றர்ஸ் அணியும் முதல் போட்டியில் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற காலி அணி களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் அணிக்கு தொடக்கம் கொடுத்த அவிஸ்க 9, றஹ்மனுல்லா குர்பாஸ் 1 என்று ஏமாற்றினர்.

அடுத்து வந்த தனஞ்சய போராடினார். அவருடன் சொஹைப் மலிக்கும் இணைந்து ஓரளவுக்கு அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர். தனஞ்சய 29 ஓட்டங்களுடனும், மலிக் 30 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

அடுத்து வந்தவர்களில் திஸர பெரேரா 16, டுனித் வெல்லாலகே 30 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

19.5 ஓவர்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்த யாழ்ப்பாணம் கிங்ஸ் அணி 137 ஓட்டங்களைப் பெற்றது.

காலி அணியின் பந்துவீச்சில் வகாப் றியாஸ், இமாட் வசீம், நுவான் துசர, நுவான் பிரதீப், இப்திகார் அஹமட் ஆகியோர் தலா 2 விக்கெட்களை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய காலி அணிக்கு ஆரம்பம் கொடுத்த குசல் மெண்டிஸ் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அவர் அரைச்சதம் கடந்தபோதும், மற்ற வீரர்கள் எவரும் சோபிக்கவில்லை.

இதனால், 20 ஓவர்கள் நிறைவில் காலி கிளாடியேற்றர்ஸ் அனைத்து விக்கெட்களையும் இழந்து 113 ஓட்டங்களைப் பெற்று 24 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. யாழ்ப்பாணம் அணியின் பந்துவீச்சில் பினுர பெர்னாண்டோ 3 விக்கெட்களையும் விஜயகாந்த் வியாஸ்காந்த் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர். (ஐ)

## பிரேசில் கோல் மழை!

டோஹா, டிசெ. 07

தென்கொரியாவுக்கு எதிரான போட்டியில் கோல் மழை பொழிந்து பிரேசில் அணி காலிறுதிக்கு தகுதி பெற்றது.

கட்டாரில் நடக்கும் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் நேற்று மாலை நடந்த 16 அணிகள் சுற்றில் பிரேசில் - தென்கொரியா மோதின.

அதிரடியாக ஆடிய பிரேஸில் அணி 36 நிமிடங்களில் 4 கோல்களை போட்டு உற்சாகத்தைப் பரவ வைத்தது. 7ஆவது நிமிடத்தில் வினி, 13ஆவது நிமிடத்தில் தண்டனை உதை மூலம் நெய்மர், 29ஆவது நிமிடத்தில் றிச்சாலிசன், 36ஆவது நிமிடத்தில் லூகாஸ் பாகியூடா ஆகியோர் கோல் அடித்தனர்.

முதலாவது பாதி ஆட்டம் நிறைவடைந்தபோது பிரேசில் 4- 0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றிருந்தது.

இரண்டாவது பாதி ஆட்டத்திலும் பிரேசில் விறுவிறுப்பாக ஆடியபோதும் கோல் எதையும் அடிக்க முடியவில்லை. எனினும், 76ஆவது நிமிடத்தில் பயிக் செங் - ஹோ தென்கொரியா அணிக்காக ஆறுதல் கோல் அடித்தார்.

இறுதியில், 4 - 1 என்ற கோல் கணக்கில் பிரேசில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறியது. (ஐ)



இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.12.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.